மாலை: 50 மணி:3 மார்ச் 2008 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு



# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்

தென்னாடுடைய சிவனே போற்றி | உ | எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

கயிலையே மயிலை ! | திருச்சிற்றம்பலம் | மயிலையே கயிலை !!

# அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயில்

## திருமயிலை, சென்னை - 600 004.

## பங்குனிப் பெருவிழா அழைப்பிதழ் - 2008

எல்லா உலகங்களுக்கும் நாயகனாய், விறகில் தீயும், பாலில் படுநெய்யும்போல் எங்கும் நிறைந்த சிவபெருமான் தம்மை மெய்யன்பர்கள் வழிபடும் பொருட்டு, பல்வகைத் திருவுருவம் தாங்கித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய தலங்களுள், தொண்டை நாட்டில் சென்னை பகுதியில் கடலைச் சார்ந்தும், உமாதேவியார் மயில் வடிவம் கொண்டு இறைவனை வழிபட்டதும் முருகவேள், நான்முகன், வேதம் (மறை) சுக்கிரன் (வெள்ளி) இராமர் ஆகிய இவர்கள் வழிபட்டு பேறு பெற்றதும் திருஞான சம்பந்தர் என்பைப் பெண்ணுருவாக்கி அருளியதும், வாயிலார் நாயனார் தோன்றி வழிபட்டு முக்தி பெற்றதும் திருவள்ளுவர் அவதரித்த சிறந்த புண்ணியத்தலமுமான திருமயிலை, கபாலீச்சரத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவர பெருமானுக்கு நடைபெறும் பங்குனிப் பெருவிழா நிகழ்ச்சிகளை கண்டு வணங்கி இருமை இன்பத்தையும் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

| விழா | மார்ச் 2008 | சர்வஜித் ஆண்டு | கிழமை | காலை மணி | பகல் விழா | இரவு மணி | இரவு விழா |
|---|---|---|---|---|---|---|---|
| | 11 | மாசி 28 | செவ்வாய் | 12.30 | கிராம தேவதை பூஜை<br>அருள்மிகு கோலவிழி அம்மன் சிறப்பு வழிபாடு | 9.00 | விநாயகர் உற்சவம்<br>வெள்ளி மூஷிக வாகனம் |
| 1 | 12 | 29 | புதன் | 6.00<br>6.30-7.30 | கொடியேற்று மண்டபத்தில் இறைவன் எழுந்தருளல்<br>**கொடியேற்றம்**<br>பவழக்கால் விமானம் | 10.00 | அம்மை மயில் வடிவில் சிவபூஜை காட்சி, புன்னை மரம், கற்பக மரம் வேங்கை மர வாகனங்கள் |
| 2 | 13 | 30 | வியாழன் | 8.30 | சூரிய வட்டம் | 9.00 | சந்திர வட்டம், கிளி, அன்ன வாகனங்கள் |
| 3 | 14 | பங்குனி 1 | வெள்ளி | 6.00<br>9.30 | **அதிகார நந்தி காட்சி**<br>கந்தருவன், கந்தருவி, மூஷிகம், வெள்விடை வாகனங்கள்<br>திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் விழா | 9.00 | பூதன், பூதகி, தாரகாசுர வாகனங்கள் |
| 4 | 15 | 2 | சனி | 8.30 | புருஷா மிருகம், சிங்கம், புலி, வாகனங்கள் | 9.00 | நாகம், காமதேனு, ஆடு வாகனங்கள் |
| 5 | 16 | 3 | ஞாயிறு | 8.30 | சவுடல் விமானம் | 12.30 | வெள்விடை பெருவிழாக் காட்சி |
| 6 | 17 | 4 | திங்கள் | | பல்லக்கு விழா | 10.00 | ஐந்திருமேனிகள் யானை வாகனங்கள் |
| 7 | 18 | 5 | செவ்வாய் | 6.45<br>8.00 | இறைவன் திருத்தேருக்கு எழுந்தருளல்<br>**திருத்தேர் வடம் பிடித்தல்** | | தேரிலிருந்து இறைவன் திருக்கோயிலுக்கு எழுந்தருளல், ஐந்திருமேனிகள் விழா |
| 8 | 19 | 6 | புதன் | 11.30<br>3.30 | திருஞான சம்பந்தசுவாமிகள் எழுந்தருளல் என்பை பூம்பாவையாக்கி அருளல்<br>வெள்ளி விமானத்தில் இறைவன் அறுபத்து மூன்று நாயன்மார்களோடு திருக்காட்சி | | சந்திரசேகரர் பார் வேட்டை விழா<br>ஐந்திருமேனிகள் விழா |
| 9 | 20 | 7 | வியாழன் | | ஐந்திருமேனிகள் விழா | 6.30 | இறைவன் இரவலர் கோல விழா<br>ஐந்திருமேனிகள் விழா |
| 10 | 21 | 8 | வெள்ளி | | திருகூத்த பெருமான் திருக்காட்சி<br>ஐந்திருமேனிகள் விழா, தீர்த்தவாரி | 7.30<br>9.30 - 10.00 | புன்னை மரத்தடியில் உமாதேவியார் மயிலுருவுடன் மாதேவரை வழிபடல்.<br>**திருக்கல்யாணம்**<br>கயிலாய ஊர்தி, கொடியிறக்கம் சண்டேசுவரர் விழா நிறைவு |
| | 22 | 9 | சனி | | உமா மகேஸ்வரர் தரிசனம் | | பந்தம் பறி விழா |
| | 23 | 10 | ஞாயிறு | | விழா நிறைவுத் திருமுழுக்கு | | விடையாற்றி தொடக்கம் |

**ம.தேவேந்திரன்** பி.எஸ்.சி.,பி.எல்
துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

**டாக்டர் நல்லி என். குப்புசாமி செட்டியார்**
அறங்காவலர் குழுத் தலைவர்

**விஜயா தாயன்பன், பி.ஆர். தமிழரசன், பொழிச்சலூர் வைத்தியநாத முதலியார்**
அறங்காவலர்கள்



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2039 ஸர்வஜித் - பங்குனி
மாலை: 50 மணி 3 மார்ச் 2008

பேரன்புடைப் பெருந்தகையீர்!

வணக்கம்.

திருமணம் கமழும் தெய்வத்திங்களாக விளங்குவது பங்குனி. பெருகி வளர்க நீ எனும் மறைமொழியாக (பல்குக நீ) பங்குனித் திகழ்கிறது. இம்மாதத்தில் சிவாலயங்களில் பார்வதி பரமேசுவரர் திருமணங்களும், திருமால் ஆலயங்களில் தாயார் பெருமாள் திருக்கல்யாணங்களும் நடைபெறுகின்றன. காஞ்சி ஏகாம்பரேசுவரர், திருமயிலை கபாலீசுவரர் - கற்பகவல்லி திருமண விழாக்கள் பெருஞ்சிறப்புடன் இம்மாதம் நடைபெற உள்ளன.

மணம் கமழும் இம்மாதத்தில் பக்தி மணம் கமழும் திருக்கோயில் இதழ் வெளிவருகிறது. இதில், பாகவத சிரோன்மணியாக விளங்கும் கூரத்தாழ்வார் வரலாற்றை விளக்கமாகத் தந்துள்ளார் பரந்தாம ராமாநுஜதாசர் அவர்கள். பகைவர்க்கும் இரங்குவாய் நன்முனஞ்சே என்றபடி தன்னைக் காட்டிக் கொடுத்தவனுக்கும் திருமாலிடம் பரமபதப்பேறு நல்கும்படி வேண்டியது மெய்சிலிர்க்க வைக்கிறது.

சந்தக்கவிமுனியும், எங்குள பக்தர்களும் அற்புதம் இவரெனக் கொண்டாடும் அருணகிரிநாத சுவாமிகள் பக்தி நெறியை விளக்குகிறார் திரு. அழ. முத்துபழனியப்பன் அவர்கள்.

தெய்வத்தமிழ்மறையாம், திருக்குறள் பாடலுக்கு உரிய இலக்கணமாகத் திகழும் செய்திகளை சிறுகதையாக தரமுனைந்து மகாபாரதத்தில் உள்ள ஒரு காட்சியை எழுத்தோவியமாகத் தீட்டியுள்ளார் கே. பாலசுந்தரி அவர்கள்.

திருமயிலை கபாலீசுவரர் ஆலய அறுபத்துமூவர் விழாவையொட்டி "கலையுலகில் அறுபத்துமூவர்" என்னும் அருணவசந்தனின் கட்டுரை வெளிவருகிறது.

நமது ஆலய உலாவில் பரமேசுவரமங்கலத்தை அடுத்துள்ள நத்தம் செண்பகேசுவரர் ஆலயத்திற்கு அழைத்துச் செல்கிறார் பனையபுரம் அதியமான் அவர்கள். பாலாற்றங்கரையில் விளங்கும் அந்த கோயிலுக்குள்ள மகிமைகளை அக்கட்டுரையில் காண்கிறோம்.

பஞ்சாட்சரத்தின் மேன்மைகளை தனிச்சிறப்புடன் வடமொழி தென்மொழிப் பாடல்கள் மூலம் விளக்கி அதன் மேன்மையை உணர்த்துகிறார் மன்னார்குடி க. சுகுமாரன் அவர்கள்.

இந்த இதழின் முகப்போவியமாக பண்ணாரி மாரியம்மனின் வண்ணப்படமும், அவளது துதிபாடும் போற்றிகளும் இடம்பெற்றுள்ளன. கானமர் கலைச்செல்வியான அவளுடைய ஆலயச் சூழலையும் அங்கு நடைபெறும் வழிபாடுகள் விழாக்கள் பற்றியதைக் கூறும் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் காவல் தெய்வம் எனும் சிறப்புக் கட்டுரை வெளியாகியுள்ளது.


"உலகம் உய்ய உதித்த உடையவர்" எனும் தலைப்பில் ஸ்ரீமத் இராமானுஜரின் வரலாற்றுக் கட்டுரை தொடரும், அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் நினைவலைகளாக அவரது நன்றி மறவேல் எனும் தலைப்பிலான அறவுரை இவ்விதழில் இடம் பெற்றுள்ளது.

இறையருளால் அன்பர்கள் யாவரும் அன்புடனும் மகிழ்ச்சியுடனும் வாழ இறையருளைச் சிந்தித்து வணங்குகின்றேன்.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

# அவா அறுத்தல்



ஆசையை அறுத்து அறத்தை வளர்த்திட வேண்டுமென்று கங்கணம் பூண்ட இரண்டு துறவிகள்! மற்ற உயிர்களுக்கு உதவிட வேண்டுமென்பதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றிடுவோமென அவர்கள் இருவரும் தங்களின் குருவினிடத்திலே உறுதிமொழியளித்து விட்டுப் பயணம் மேற்கொண்டனர். ஒரு துறவியின் பெயர் அறவாழி! இன்னொருவர் பெயர் ஏனாதி! மலைக்குகையொன்றில் இருவரும் இளைப்பாறத் தங்கியுள்ளனர் எனக் கேள்வியுற்ற அவ்வூர் செல்வந்தர் ஒருவர் அவர்களைக் காண்பதற்குச் சென்றார். இரண்டு தட்டுக்களில் பழம் வைத்துக் கொடுத்து அவர்களைச் செல்வந்தர் வணங்கினார். துறவிகள் தங்கள் பசி நீக்க இரண்டு பழங்களை வைத்துக்கொண்டு மிச்சம் இருந்த எல்லாப்பழங்களையும் ஏழை எளியோர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தனர். செல்வந்தர் துறவிகள் இருவரையும் தனது இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். அவர்கள் மறுத்துவிட்டனர். செல்வந்தர் பத்து பொற்காசுகளை எடுத்து அறவாழியிடம் ஐந்து காசுகளையும், ஏனாதியிடம் ஐந்து காசுகளையும் அளித்து - ''வழிப்பயணத்தின் போது பிறர்க்குதவிட இதனைப் பயன்படுத்திக் கொள்க!'' எனக்கூறி விடை பெற்றுச்சென்றார்.

பொற்காசுகளைப் பையில் போட்டுக்கொண்டு துறவிகள் அந்தக் குகையிலேயே சற்றுக் கண்ணயர்ந்தனர்.

அறவாழி நிம்மதியாகத் தூங்கினார். ஏனாதி அமைதியான உறக்கமின்றி அவதிப்பட்டார். ஏனாதியின் உறக்கத்தில் ஓர் கனவு! செல்வந்தரின் அழைப்பை ஏற்று அவர் மாளிகைக்கு செல்கிறார். ஆடம் பரமான வரவேற்பு தரப்படுகிறது! பாத பூசை நடைபெறுகிறது. அவரது காலடியில் வெள்ளி நாணயங்கள் கொட்டப்படுகின்றன! என் இல்லத்திலேயே தங்கிவிடுங்கள் என்று செல்வந்தர் கேட்கிறார்! ஏனாதி, புன்னகையுடன் அதனையேற்று அந்த இல்லத்தில் தங்கிவிடுகிறார்.

தங்குவதற்கேற்ற தனியறையொன்று ஒதுக்கப்படுகிறது! நாள்தோறும் செல்வந்தர், ஏனாதியை வணங்கி வாழ்த்துப்பெற்றே வெளியே செல்கிறார்.


தனியறையில் தரையில் படுத்துறங்கிய ஏனாதிக்கு கட்டிலும் மெத்தையும் தேவைப்படுகின்றன! சில நாட்களுக்குப்பிறகு கால் கை பிடித்திட ஆட்களும் தேவைப்படுகிறார்கள்! பின்னர் அந்த

ஆள் ஒரு ஆரணங்காக இருந்திடல் நலமன்றோ என்ற ஆசையும் எழுகிறது ஏனாதிக்கு! செல்வந்தரிடம் இந்தச் செய்தி சொல்லப்படுகிறது! கண்டுகொண்டிருந்த கனவில் திடீர் மாற்றம்! செல்வந்தர் வீட்டுப்படிக்கட்டில் ஒரு ஓரத்தில் ஏனாதி நின்று கொண்டிருக்கிறார். அவரைப் பார்த்தும் பார்க்காததுபோலச் செல்வந்தர் தனது பல்லக்கு வண்டியில் ஏறி வெளியே போகிறார்! ஏனாதி முகத்தில் அசடு வழிகிறது.!

கனவு கலைந்து ஏனாதி விழித்துக்கொள்கிறார். அறவாழியை எழுப்பித் தான் கண்ட கனவைச் சொல்லி, மனத்தில் ஏற்பட்ட கலக்கத்திற்கு மருந்து கேட்கிறார்.

அறவாழி ஏனாதியைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறுகிறார்.

''செல்வந்தர் என்னிடம் தந்த ஐந்து பொற்காசுகளின் மதிப்பைப்பற்றி நான் கவலை கொள்ளாமல் - வழியில் சந்திக்கும் ஏழைகட்கு வழங்கிவிடலாமென்ற நினைவுடன் தூங்கினேன்! உமது நிலை அப்படி இருந்திடவில்லை! ஐந்து பொற்காசுகளின் மதிப்பையும் அவற்றை வழங்கிய செல்வந்தரின் மகிமையையும் அவர் விடுத்த அழைப்பையுமே பெரிதாக எண்ணிக் கண்ணை மூடியிருக்கின்றீர்! குறள் மொழியை மறந்துவிட்டீரா? ஒருவன் ஆசைகளைக் கண்டு அஞ்சி வாழ்வதுதான் அறம்! ஏன் தெரியுமா? ஒருவனைச் சோர்ந்து போய்ச் சுருண்டு விழுமாறு செய்து வஞ்சிப்பது அவனை முற்றுகையிடும் ஆசைகளே தான்!''



மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர்

அறவாழியின் அறிவுரை ஏனாதியின் நெஞ்சில் குறள் வரிகளை அலைபாயவிடுகின்றது!

''அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா''

*அதிகாரம்: 37 அவா அறுத்தல் பாடல் 366*

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே


1. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் போற்றிகள் - 4
2. எப்போ வருவாரோ - த. பிச்சாண்டி. இ.ஆ.ப., -6
3. கூரத்தாழ்வான் - ஏ.பரந்தாம ராமாநுஜதாசர். -9
4. அருணகிரிநாதரின் பக்தி நெறி - அடி.முத்துப்பழனியப்பன் -12
5. மகாபாரதத்தில் குறளின் குரல் - கே. பாலசுந்தரி -16
6. கலை உலகில் அறுபத்துமூவர் - பூசை.ச. அருணவசந்தன் -17
7. நத்தம் பரமேசுவர மங்கலம் சிவன் - பனையபுரம் அதியமான் -23
8. உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ. இராமநாத பிள்ளை-25
9. பஞ்சாட்சரம் - க. சுகுமாரன் -28
10. இரைதேடுவதோடு இறையும்தேடு - காஸ்யபன் -31
11. நன்றி மறவேல் - அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் -33
12. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் காவல் தெய்வம் -37

# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் போற்றிகள்



அரனிடம் கயிலையில் அமர்ந்தாய் போற்றி
அன்பர்கள் துயர்கெட நினைத்தாய் போற்றி
ஆதியில் பலதலத் தடைதாய் போற்றி
ஆகியும் காடுற நினைதாய் போற்றி
இன்புற வனத்துறை இசைந்தாய் போற்றி
இறைவிநீ சுயம்புவாய் எழுந்தாய் போற்றி
ஈசனோ டொன்றியே இருந்தாய் போற்றி
உனையடைந்தோர் தொழ உகந்தாய் போற்றி
உயர்பசுவின் பால் உவந்தனை போற்றி

ஊருளோர் கண்டிட உன்னினாய் போற்றி
ஊக்கம் மாட்டுரியவர்க் கூக்கினாய் போற்றி
எண்ணரும் தவத்தோர்க் கிரங்குவாய் போற்றி
ஏழைபோல் யாவருக்கும் இறங்கினாய் போற்றி
எல்லா இடங்களும் இருப்பவள் போற்றி

ஏதிலார் தங்கட் கெளிமையாய் போற்றி
ஐயமோடாவின் பின் அணுகினள் போற்றி
ஐமோடுனது முன் அணுகினள் போற்றி
ஔவிய மனத்தர்கள் அடைகிலாய் போற்றி
ஔவியம் வாளினால் அறைந்தனள் போற்றி

ஆஃதவனை வீழ்ந்திட அடக்கினாய் போற்றி
அஃதினால் அஞ்சினம் அகற்றினை போற்றி
கண்கண்ட தெய்வமெனக் கழறினான் போற்றி
கண்முன் உற்றவர்கெலாம் கழறினான் போற்றி
கானகம் சேர்ந்துனைக் காணச்செய் போற்றி
காணவும் உன்மகிமை காட்டினாய் போற்றி
கிட்டினோர்க் கொருவர்க் காவேசமாம் போற்றி
கிளர்த்தினாய் பண்ணாரி எனும்பெயர் போற்றி
கீழ்படிந் தெல்லோரும் வணங்கச்செய் போற்றி
கீழ்நிலையும் குணமும் மாற்றினாய் போற்றி.

குளிர்ப் பச்சிலைப் பந்தல் மேவினாய் போற்றி
குணமுளோர் அமைகூறை கொண்டனை போற்றி
கூட்டினார் வில்லையால் கோயிலாய் போற்றி
கூவமும் கோபுரம் கொண்டனை போற்றி
கெழுமிய தூபி மண்டபத்துளாய் போற்றி
கெற்பம் அர்த்த மகாமண்டபம் போற்றி
கேகயம் ஏறுகுகன் தாயுமை போற்றி
கேதில் சோபனமண்டபம் கொண்டாய் போற்றி
கைதவம் ஆகும்நின் கருணை அருள்போற்றி
கயிலையுற்றவள் வனக்காடுகாளாய் போற்றி

கொற்றவை கருணைக் குணக்கடல் போற்றி
கொடிய மாவினைகளைத் தீர்ப்பவள் போற்றி
கோதிலாதவர் மனக்கோயிலாய் போற்றி
கோவமர் சிவனொடு நடித்தனை போற்றி
கௌதமன் மனைவிகற்பு வந்தனை போற்றி
கௌரவப் புகழ் நிறை காரணி போற்றி
நப்போல் தொடர்ந்தருள் காட்டும் நீ போற்றி
நப்போல் தொடர்மனம் காட்டுவாய் போற்றி
சக்கரக்கையோன் தமையவள் போற்றி
சற்க்குணர் போற்றும் தவத்தாள் போற்றி

சாதிக்க லாபமுறும் தாபவள் போற்றி
சாதிக்கும் வல்லமை தமையருள் போற்றி
சித்தர் முனிவர்கள் தொழும் தேவியே போற்றி
சித்தமுன் பாலுறத் தெளிவருள் போற்றி
சீயவாகனமேல் சிறந்தனை போற்றி
சீறியே மகிடனைச் சினத்தனை போற்றி
சுத்தநெறியார்க்கும் துலக்குவாய் போற்றி
சுத்தாத் விதத்தினில் தோற்றுவாய் போற்றி
சூசனை செய்சத்குருச் சோதியே போற்றி
சூரைக்காய் போன்றிடர் துரத்துவாய் போற்றி.

செந்நெல் விளைவயலெனும் செல்வியே போற்றி
செல்வமெல்லாம் தரும் தேவியே போற்றி
சேரியந்தன் பிணியெல்லாம் தீர்த்தருள் போற்றி
சேயனைப் பேணிச் சிறப்பருள் போற்றி
சைல மன்னன் மகள் சௌந்தரி போற்றி
சைவலம் தீர்த்தருள் தந்தாய் போற்றி
சொற்குற்றம் நீக்கியருள் சுந்தரி போற்றி
சொல்லெலாம் நீயெனத் துலங்குவாய் போற்றி
சோளர் வாத்தியம் சுவைத்தனை போற்றி
சோலையில் கோயில் வாழ்த்துமணி போற்றி.

சௌந்தரி நிரந்தரி துரந்தரி போற்றி
சௌபாக்கியம் அன்பருக்குத் தருபவள் போற்றி
ஞமலி ஒலி செவிகொளும் நாயகி போற்றி
ஞயம்பட உரைப்பவர் உரைகொள்வாய் போற்றி
ஞாயிறு பல்கோடி ஒளி நண்ணுபவள் போற்றி
ஞாயிறைப் பணிகொளும் நாயகி போற்றி
ஞிமிறு முதல் பல்மிகுக வனமுளாய் போற்றி
ஞிமிறிறொலியும் கொளும் நிமலியவள் போற்றி
டமகரம் தாங்கு கரத்தணி முதல்வி போற்றி
டமரததாலுகு தான் பேணல் போற்றி

தந்தை மலையத்துவசன் தனைக்கொண்டாய் போற்றி
தன்பெயர் மீனாம்பிகை தான் கொள்வாய் போற்றி
தினமும் நினைப்பவர் வினை தீர்ப்பவள் போற்றி
தில்லை சிவகாமியாம் செல்வியவள் போற்றி
துயர் துடைத்துயர் நலமளிப்பவள் போற்றி
தூய மணி மண்டபம் துலங்குவாய் போற்றி
தென்னவர் நாடரசு செய்தவள் போற்றி
தென்னவன் தவச் சிறப்பீய்ந்தவள் போற்றி
தேசமெல்லாம் அருள் செலுத்துபவள் போற்றி
தேசு நிறைத்துடுமுளம் திகழ்பவள் போற்றி

தையல் நாயகிப் பேர் தழைத்தவள் போற்றி
தையலாய் தட்சன் மகளென வந்தாய் போற்றி
தொல்லைமரர் வந்துபணி தூயபதம் போற்றி
தொல்லைகள் நீக்கும் துரந்தரி போற்றி
தோகை மயில் வாகனன் தாயுமை போற்றி
தோகையர் கீதவொலி சுவைகொள்வாய் போற்றி
நல்லவை அல்லவை நடுநிற்பாள் போற்றி
நறுமணம் குளிர்வனம் நடுநிற்பாள் போற்றி
பண்ணாரித் தலமேவும் பார்ப்பதி போற்றி
பண்ணாரம் புனைபவள் பதப்போது போற்றி

மாதேவன் ஒருபுறம் விளங்குபவள் போற்றி
மாதேவி பலநலங்கள் வழங்கிடவே போற்றி
மின்னுமுகில் மேவுவனம் விளங்குபவள் போற்றி
மிக்க புகழ் கொண்டிலகு மெய்மை அருள் போற்றி
பாமாலை அணிந்திடும் பரமேட்டி போற்றி
பாவலர் நாவலர் துதிப் பாட்டேற்பாய் போற்றி
மங்கள கல்யாணியவள் மலரடிகள் போற்றி
மங்காத பண்ணாரி மாரியுமை போற்றி போற்றி

# எப்போ வருவாரோ

பிறவிகளில் மனிதப் பிறவி அரியது. 'அரிது, அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' என்பார் ஔவையார்.

புல்லாய்ப் பூடாய், புழுவாய்
மரமாகி, பல்விருகமாய், பறவையாய்
பாம்பாய், கல்லாய், பின் மனிதர்களாக
ஆவார்கள் என்பார் மாணிக்கவாசகர்

இவ்வாறு உள்ள உயிர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான அறிவு உண்டு.

ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே,
இரண்டு அறிவதுவே, அதனொடு நாவே
மூன்று அறிவதுவே, அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே, அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே, அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே, அவற்றொடு மன்னே

-(தொல், மரபு 27)

என்பார் தொல்காப்பியர் இதில் ஒவ்வொரு விதமான அறிவுடைய உயிர்களின் நிலையை பரிணாம வளர்ச்சியில் வேறுபடுத்திக் காட்டுவார்.

இதில் இறுதியாக வருவது செவி.

செவியின் வழியாகச் சிந்திப்பனவற்றைக் கேட்க முடியும்.

'கற்றலில் கேட்டலே நன்று, என்பார்கள் செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்' என்றும் பெரியவர்கள் கூறுவார்கள்.

அபிமன்யு, கருவில் இருந்த போதே, தன்னுடைய தாயிடம் அர்ச்சுனன் கூறிய போர் வியூகங்களை அறிந்து கொண்டதாக மகாபாரதம் கூறுகிறது.

வாரியார் கூறுவார். நம்முடைய உடம்பில் இறைவனால் மூடப்படாத உறுப்பு செவிகள் மட்டுமே, கண்ணுக்கு இமையிருக்கிறது. மூக்கிற்கும் பாதுகாப்பு உண்டு. வாய் மூடி உள்ளது. ஆனால் மூடாமல் எப்போதும் திறந்துள்ள பகுதி செவிகள் மட்டுமே. செவிகள் மூலமாக நல்ல செய்திகளைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

அவற்றைச் 'செவிநுகர் கனிகள்' என்பார் கம்பர்.

இங்கே 'எப்போ வருவாரோ' என்ற தலைப்பில் சான்றோர்கள் பற்றி பல அறிஞர்கள் உரையாற்றி உள்ளனர். 'எப்போ வருவாரோ' என்பது நல்ல தலைப்பு 'எப்போ வருவாரோ' எந்தன் கலீதீர! என்று சீர்காழி அருணாசலக் கவிராயர் ஏங்கினார்.

திருமணமாகாத பெண், நல்ல கணவன் 'எப்போ வருவாரோ' என்று ஏங்குவாள்.

வேலை கிடைக்காத மாணவன், வேலை நியமனக் கடிதத்தை எடுத்துக் கொண்டு, தபால்காரர் 'எப்போ வருவாரோ' என்று ஏங்குவார்.

இறைத் தூதர்கள் 'எப்போ வருவாரோ' என்று நாம் ஏங்குகிறோம்.

இறைவன் முந்தைய யுகங்களில், நேரிடையாகத் தோன்றினான். சைவத்தில், அவ்வப்போது நேரேதோன்றி, அருள் பாலித்தார். வைணவத்தில், திருவுடையார் வயிற்றில் அவதாரம் செய்து மனிதனாகத் தோன்றி அருள் பாலித்தார். இந்தக் கலியுகத்தில் இறைவன் மகான்களாகத் தோன்றி அருள் பாலிக்கிறார்.

திருவள்ளுவர் என்றொரு மகான். பின்னர் சைவத்தில் ஞானசம்பந்தர் ஒரு மகானாகத் தோன்றினார். அவருடைய சம காலத்தில் அப்பர், பின் சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், அருணகிரிநாதர் என்று வாழையடி வாழையாக மகான்கள் இம்மண்ணில் தோன்றியுள்ளனர். இனியும் தோன்றுவார்கள்.

ஞானசம்பந்தர் என்ற குழந்தைக்கு இறைவன் பாலைக் கொடுத்து ஆட்கொண்டான்.

**த. பிச்சாண்டி, இ.ஆ.ப**
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்.

ஞானத்தோடு நல்ல தொடர்புடைய குழந்தை அதனாலே அவர் ஞானசம்பந்தர் என்று ஆனார்.

''சம்'' என்றால் நல்ல என்று பொருள்.

''பந்தம்'' என்றால் தொடர்பு, இப்படி நல்ல தொடர்பு உடையவர் களைத்தான் ''சம்பந்தி'' என்பது மரபு. ஆக ஞானத் தோடு நல்ல தொடர்பு உடையவர் ஆதலால் அவர் ஞானசம்பந்தர். இவர் தென்னாட்டில் பாண்டிய நாட்டில் தமிழையும், சமயத்தையும் வளர்த்தார். இறைவன் அடியார்களை நாளும், கோளும் எதுவும் செய்யாது என்று ஆணையிட்டார். தன்னுடைய பத்து பாடல்கள் அடங்கிய பதிகங்களைப் பாடினால், என்ன நலம் விழையும் என்று பதினோராவது பாட்டில் தெளிவுபடுத்தினர்.





இதற்குப் பின் வந்த நாவுக்கரசர் தொண்டு நெறியைச் சிறப்பித்தார். இவருக்குச் சூலை என்கிற வயிற்று வலியைக் கொடுத்து இறைவன் ஆட்கொண் டார்.

தொண்டே உயர்வுடையது. அதனால் தொண்டு செய்யும் தொண்டர் தம் பெருமையை அளவிட முடியாது என்பார் ஔவையார். அவர்களுடைய சரிதத்தைத் 'திருத்தொண்டர் மாக் கதை' என்று பாடினார் சேக்கிழார்.

மூன்றாவது வந்த சுந்தரர் பெருமானுக்கு ஓலை காட்டி ஆட்கொண்டான் இறைவன்.



இவ்வாறாக பாலைக் கொடுத்தும், சூலை கொடுத்தும் ஓலை கொடுத்தும் மூன்று அருளாளர்களை இறைவன் இந்த மண்ணுக்கு வழங்கினார்.


இவர்களுடைய தமிழ் அருமையானது.

மூவர் தமிழைப் பற்றி, கி.வா.ஜ என்ற பெரியவர் கொஞ்சும் தமிழ், கெஞ்சுதமிழ், விஞ்சுதமிழ் என்று முறைப்படுத்துவார்.

மாணிக்கவாசகர் ஒரு தனிப்பிறவி, ஆத்மாவின் தேடல் பக்தி சரணாகதி என்பது அவரின் திருவாசகம், வைணவமும் அப்படித்தான். முழுக்க முழுக்க சரணாகதி தத்துவத்தை வலியுறுத்துவது வைணவத்தில் இறைவன் அவதாரங்களாகத் தோன்றி அருளினான். சைவத்தில் அவ்வப்போது தோன்றி அருளினான். பக்தி வெள்ளத்தில் இவர்கள் ஆழ்ந்து போனதால், ஆழ்வார்கள் ஆனார்கள்.



சைவத்தில் அருளாளர்கள் தந்த பாடல்களும் சரி, வைணவத்தில் ஆழ்வார்கள் தந்த பாடல்களும் சரி கால வெள்ளத்தில் காணாமற்போயின.



தமிழர்களின் இயல்பான மறதியால் இவ்வாறு ஏற்பட்டது. இறைவனே மீண்டும் இவற்றை மீட்டுத் தந்தார். சைவத் திருமுறைகளை நம்பியாண்டர் நம்பி தொகுத்துத்தந்தார்.

ஆழ்வார் பாடல்களை நாதமுனிகள் நாலாயிரமாகத் தொகுத்தார்.

பின்னாளில் வேற்றுப் பண்பாட்டின் ஆதிக்கம் அதிகமான போது சைவமும் வைணவமும் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தபோது இரண்டையும் இசையால் தமிழால் ஒன்று படுத்தியவர் அருணகிரிநாதர். அவருடைய சந்தமேவிய தமிழுக்கு எதுவுமே இணையில்லை.

இன்றைக்கும் அருளாளர்கள் இருக்கிறார்கள். இந்த அருளாளர்கள் தாம் நம்முடைய வழிகாட்டிகள். குருநாதர்கள் குருவருள் கிடைக்காவிட்டால் எதுவும் கிட்டாது.

மாலை நேரத்தில் மூன்றாம் பிறையைக் காண்பது கடினம். அதை தம்முடைய சுட்டு விரலால் சுட்டி விளக்கம் தருவார் ஒருவர். மூன்றாம் பிறையைத் தேடும் அவர்களுக்கு அவர்தான் குரு. அதுபோல மகான்கள் அருளாளர்கள், இறைவனை நமக்குச் சுட்டிக் காட்டுகிறார்கள் அவர்களுடைய அருள் அனுபவத்தை நமக்கு சுட்டி விளக்குவார்கள். இந்த அருளாளர்கள்தான் மனித குலத்தை மேம்புடுத்துவார்களான. ஞானப்பசிப் பிணி மருத்துவர்கள். இவர்களுடைய அனுபவத்தையும் நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு வாழையடி வாழை என இந்த ஞான பரம்பரை வந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்த ஞானத்தை நமக்கு வழங்கியுள்ள பெரியவர்களை நாம் நினைக்க வேண்டும். போற்ற வேண்டும்.

குறிப்பாக நம்முடைய குழந்தைகளுக்கு இவற்றை நாம்தர வேண்டும்.

மனித குலம் தழைக்கவேண்டும் உய்தி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவே இந்த ஞானச்செம்மல்கள், இந்த அழியா அமுதத்தை நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

இதுபோன்ற அருளாளர்களைப் பற்றி சமயச் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்று அறநிலையத்துறை எல்லாக் கோயில் நிர்வாகிகளையும் பணித்திருக்கிறது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இவ்வாறு சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன. கோவையிலும் விரைவில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(கோவையில் 'எப்போ வருவாரோ' என்ற தலைப்பில், சமய, சமுதாயச் சான்றோர்களைப் பற்றிய உரைக் கோவையை நிறைவு செய்து 12.1.2008 அன்று சிறப்பு ஆணையர் ஆற்றிய முன்னிலை உரையின் சுருக்கம்)*

# கூரத்தாழ்வான்

முனைவர். ஏ. பரந்தாம ராமாநுஜ தாசர்
திருமால் அடியார் குழாம் - சென்னை

**கா**ஞ்சிபுரத்துக்கு வடமேற்கே 15 கி.மீ. தூரத்தில் கூரம் என்றொரு ஊர் இருக்கின்றது. இவ்வூர் 16ம் நூற்றாண்டில் மிகப்பெரிய ஊராக விளங்கியது, அவ்வூரைக் கூரத்தை சேர்ந்த கூரேசர் அரசாண்டு வந்தார். நீதி நெறி தவறாது செங்கோலோச்சி ஆட்சி செய்து வந்தார். இரவில் மாறுவேடம் பூண்டு, ஊரில் ஆங்காங்கே சென்று மக்களால் பேசப்படும் குறைபாடுகளைக் கேட்டறிந்து அவற்றை போக்கி வந்த மாண்பாளர். ஐப்பசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் தோன்றியவர்.



அவ்வூரில் ஏழை குடியானவருக்கு ஒரு மகள் இருந்தாள். அவளது ஜாதகப்படி அவளைத் திருமணம் செய்து கொள்பவர் இறந்து விடுவார் என்பதை அறிந்த பெற்றோர் மனம் வருந்தினர். எனவே அவளுக்குத் திருமணம் செய்ய முயற்சி செய்யாது இருந்து வந்தனர். எனினும் பெண்ணுக்கு வயது அதிகமாவதைக் கண்டு திருமணத்தை பற்றி இரவில் அவர்கள் வருந்தினர் ஒருநாள் கலந்துரையாடினர். தாய் எப்படியாவது உண்மையை மறைத்து திருமணம் செய்து வைக்கலாம் என்றாள். ஆனால் தந்தையோ நீதிக்கு மாறாக பொய் சொல்லி திருமணம் செய்து மணமகனின் உயிர் இழப்பிற்கு காரணமாக இருக்க இசையவில்லை. இந்த உரையாடல் சற்றே கடுமையாகவும், உருக்கமாகவும் இருந்தது.

மன்னர் இரவு நகர் வலத்தின் போது அந்த வீட்டில் நடைபெற்ற உருக்கமான உரையாடலை நின்று கேட்டார். அப்பெண்ணிற்கு வாழ்வளிக்க திட்டம் தீட்டினார். அப்பெண்ணைத் தானே திருமணம் செய்து கொண்டு வாழ்வளித்து அதன் மூலம் அவளுடைய பெற்றோர் களாகிய தமது குடிமக்களின் குறையைப் போக்க உறுதிபூண்டார். ஆனால் நிபந்தனையோ மிகவும் கடினமானதும், வருந்தத்தக்கதாகவும் இருந்தது.

திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்வில் ஈடுபட்டால்தானே இச்சிக்கல்

ஏற்படும். ஆகவே திருமணம் செய்து கொண்டு, வாழ்வளித்து, இல்லற இன்பத்தைத் துறந்து வாழ உறுதிபூண்டார். என்னே கூரத்தாழ் வானின் தியாக உள்ளம் விசுவாமித்திரர் போன்ற முனிவர்களாலும் துறக்க முடியாத பெண் இன்ப வாழ்வை அரசன் துறக்கத் தீர்மானித்தார். மக்களிடம் உள்ள மூன்று பெரும் ஆசைகளான பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை மூன்றனுள் முதலான பெண்ணாசையைத் துறக்க உறுதிபூண்டார்.

மறுநாள் காலை பெண் பேசுவதற்கான சீர் வரிசைகளுடனும், அரச மரியாதைகளுடனும் அப்பெண்ணின் வீடு நோக்கிச்சென்றார். இதைக் கண்ட பெற்றோர்கள் ஒருபுறம் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டாலும், மறுபுறமுள்ள பின் விளைவை நோக்கிச் சொல்லொணாத் துயரம் அடைந்தனர். அரசனை வரவேற்று மரியாதையுடனும் வணக்கத்துடனும் நின்றனர்.

அரசன் இரவு நகர் வலத்தின் போது தாம் கேட்டறிந்த செய்தியை அவர்களிடம் கூறி அவர்களுடைய பெண்ணை மணந்து அவளுக்கு வாழ்வளிக்கப் போவதாகக் கூறினார். இதைக் கேட்ட பெற்றோர் இசைய மறுத்தனர். தங்களுடைய பெண் வாழ்விற்காக அரசரை இழக்க விரும்பவில்லை. அரசர் திருமணம் செய்து கொண்டு இல்லற இன்பம் எய்தாமல் இருந்தால், உயிருக்கு எந்த இழிவும் ஏற்படாது என்று கூறி, பெற்றோர்களின் இசைவு பெற்று, ஆண்டாள் என்ற அப் பெண்ணைத் தன் மனைவியாக ஏற்றுக் கொண்டு இனிதே வாழ்ந்து வந்தார்.

அரசர் தனது நாட்டிலுள்ள செல்வம் அனைத்தும் மக்களுடையதே என்று கூறி, ஏழை எளியவர்களுக்கு வாரிவழங்கி வந்தான். 'செல்வத்துப்பயனே ஈதல்' என்ற புறநானூற்று பாடல் கருத்தினையும் வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை எனும் குறட்கருத்தினையும் செயல்படுத்தினார் அரசரின் மனைவி ஆண்டாளும் கணவனுடன் கருத்தொருமித்து உறுதுணையாக இருந்து வந்தாள்.

''அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி வேளாண்மை செய்தற்
, பொருட்டே'

எனும் குறட்கருத்துகள் இவர்களது இல்லற வாழ்வில் களிநடம் புரிந்தன. இவர்கள் காலையிலிருந்து நள்ளிரவைத் தாண்டியும் அறம் செய்து மணிகள் பொருத்தப்பட்ட அரண்மனை வந்தனர். இவர்களுடைய நிலைக்கதவுகள் நள்ளிரவுக்குப்பின்னரே மூடப்படும்.

அக்காலத்தில் பூவிருந்த வல்லியில் தோன்றிய திருக்கச்சி நம்பியும் ஸ்ரீபெரும்புதூரில் அவதரித்த ராமானுசரும் காஞ்சியில் தங்கி பேரருளாளனாகிய வரதராசப் பெருமாளுக்கு பகவத்தொண்டு செய்துவந்தனர். ஒரு நாள் இரவு நெடுநேரம் கழித்து பேரருளாளன், பெருந்தேவி தாயாருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அந்த நேரம் அமைதியாக இருந்ததால் தூரத்தில் கூரம் நெடும் நகரில் மன்னன் நிலைக்கதவுகளை சாத்தியதால் ஏற்பட்ட மணி ஓசை, பெருந்தேவியாரின் காதுகளில் ஒலித்தது. தாயார், பேரருளாள ரிடம் இந்த ஒலி எங்கிருந்து இந்த நள்ளிரவில் கேட்கிறது? என்று வினவினாள் 'பேரருளாளன், கூரம் என்ற ஊரின் அரசன் தர்மங்களை செய்து இப்போதுதான் அரண்மனை நிலைக்கதவுகளைச் சாத்துகிறான். அக்கதவுகளின் மணியோசை இது என்றான். தாயார், அம்மன்னன் அவ்வளவு பெரும் செல்வந்தனோ என்று கேட்டாள்.

பேரருள்ாளனுக்கு பகலெல்லாம் விசிறி வீசும் தொண்டாற்றிய திருக்கச்சி நம்பிகளிடம் இரவில் தனிமையில் பேரருளாளன் பேசுவது வழக்கம். அப்பொழுது முன்நாள் இரவு நடந்த கூரத்து மன்னன் தர்ம செயலையும், செல்வ செழிப்பையும் நம்பிகளுக்குத் தெரிவித்தார் பேரருளாளர். நம்பிகள் மூலம் கூரத்தின் மன்னருக்கு செய்தி எட்டியது. இதை கேட்ட மன்னர் நிலையற்ற தமது செல்வ செழிப்பு ஆத்மத்தாயாகிய பெருந்தேவி தாயாருக்கு எட்டிவிட்டதே என்று வருந்தினார்.

மறுநாள் முதல் வேலையாக மக்களை அழைத்து தமது செல்வம் அத்தனையும் வாரி வழங்கினார். நகரையும் மக்களையும் விட்டு விலகினார். ஸ்ரீமத் இராமானுஜருக்கு சீடனாக

விரும்பி மனைவி ஆண்டாளுடன் காஞ்சி நோக்கிப் பயணமானார். மாலை நெருங்கி இருள் சூழ்ந்தது.

உடன் சென்ற ஆண்டாள்இருட்டி விட்டதே பயமாக இருக்கிறது என்றாள். மன்னர், ஆண்டாளே ஏன் பயப்படுகிறாய்? மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம் ஏற்படும் என்றார்.

ஆண்டாள், தாங்கள் அமுதுண்ணும் பொற்கிண்ணத்தை மட்டும் மடியில் எடுத்து வந்திருக்கிறேன் என்றாள். மன்னன் அதை வாங்கி வீசி எறிந்து விட்டு இனி பயமில்லாமல் வா என்று கூறி அவளை அழைத்துக்கொண்டு காஞ்சியை அடைந்தார். கூரத்து மன்னர் இவ்வாறாக பெண்ணாசை, மண்ணாசை பொன்னாசைகளை துறந்து துறவு வாழ்க்கை ஏற்றார். அந்நிகழ்ச்சி இன்றும் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

என்னே கூரத்து மன்னரின் மண்ணாசை, பொன்னாசைத் துறவு. யார் இப்படி செய்வார் கள் அப்பொழுது காஞ்சியில் வாழ்ந்த யதிரா சராகிய ஸ்ரீமத் இராமானுஜரிடம் சென்று தம்மையும் ஆண்டாளையும் சீடராக ஏற்றுக் கொண்டு அருள் பாலிக்க வேண்டினார். நடந்தவையெல்லாம் அறிந்த ஸ்ரீமத் பகவத் இராமானுஜர் இருவரையும் சீடர்களாக ஏற்று மகிழ்ந்தார். திருக்கச்சி நம்பிகளின் உறவும் கிடைத்தது இராமானுஜரின் திருவடி சம்பந்தமும், பஞ்சசம்ஸ்காரமும் பெற்று , பகவத் ஆச்சார்ய, பாகவதத் தொண்டுகளைச் செவ்வனே அவர்கள் ஆற்றி வந்தனர்.

பகவத் இராமானுஜர், ஆளவந்தார் கட்டளைகளை நிறைவேற்றவும் ஸ்ரீவைஷ்ணவத்தை முன்னின்று நடத்தி வளரச் செய்யவும் பேரருளாளன் அனுமதியுடன் காஞ்சியை விட்டு திருவரங்கம் அடைந்தார்.

மன்னன் துறவியாகி ஸ்ரீமந் நாராயணனிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியாலும் குருவாகிய இராமானுஜர் மூலமாக வேதங்களில் ஆழ்ந்து கிடந்த மறைபொருளை அறிந்து வெளியிட்டதாலும் ஆழ்வார் எனும் சிறப்பு பெயரைப் பெற்றார். கூரத்துத்துறவி யாகவிளங்கியவர் பின்னாளில் கூரத்தாழ்வானா னார்.

அடுத்த இதழில் தொடரும்

# சிவராத்திரியும் - மாசி அமாவாசையும்

இந்த உலகமக்கள் நலமுடன் வாழத் தன் இன்னுயிரை நீத்து புண்ணிய உலகங்களிலும், வீரசுவர்க்கங்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மகா சிவராத்திரியிலும் - மாசிமாத அமாவாசையிலும் பூமிக்கு வந்து தாங்கள் வசித்த இடங்களைக் கண்டு மகிழ்கின்றனர் என்பது ஐதீகம். ஆதலால் சிவராத்திரியன்று காவல் தேவதைகளாக விளங்கும் நம்முன்னோர் களை வழிபடவேண்டும். பொங்கலிட்டு, பூதூவி, தூபம் காட்டி வழிபட்டால் குலம் தழைக்கும், மனக்கலக்கங்கள் தீரும் வாழ்வு செழிக்கும்.



# அருணகிரி நாதரின் பக்தி நெறி



பக்தி நெறி என்பது அன்புவழி; நம்மைமீறிய இறை சக்தியால் அன்பு மீதூர்ந்து நம்மை நாம் இழந்து, அமைதி அடைவதே அதன் குறிக்கோள், பல்வேறு காலங்களில், பல்வேறு பெருமக்கள் பக்தி நெறியை பலவாறு விரித்துக் கூறியுள்ளனர்; போற்றியுள்ளனர்.

அவற்றுள் அருணகிரிநாதரின் பக்திநெறி தனித்துவம் மிக்கது.

இந்து சமயத்தைப் புறச் சமயங்கள் பாழடித்து அது வேர் அறுந்த நிலையில் இருந்ததை உயிர்ப்பித்த பெருமை அருணகிரியாருக்கு உண்டு. அதோடு, தமிழ் முற்றிலுமாகத் தேவையில்லை என்ற ஒரு காலத்தில், ஞானசம்பந்தருக்குப்பின், தமிழ்க் கொடியை உயர்த்திப் பிடித்த சிறப்பும் அவருக்கு உண்டு.

காலவெள்ளத்தில், சைவமும், வைணமும் தங்களுக்குள்ளே பிணக்குண்டு, பூசல்கள் நிறைந்த காலத்தில்; சக்தியே பெரிது, சிவம் தேவையில்லை என்ற ஒரு காலத்தில்; முருகனே பெரியவன், அவன் அப்பன் தேவை யில்லை என்ற ஒரு கால கட்டத்தில் இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளையும் ஒருங்கிணைத்து, இந்து மதம் மீளவும் உயிர்பெற உழைத்த மகான் அருணகிரிநாதர் என்பதில் ஐயமில்லை.

அருணகிரியின் பூர்வாசிரமக் கதைகள் நமக்குத் தேவையில்லை, நமக்கு வேண்டியதெல்லாம் அவர் ஓர் உயர்ந்த முருகனடியார் என்பதே ஆகும்.

முருகப்பெருமான் ஆணையின்படி அருணைப் பதியில் இருந்து தலங்கள் தோறும் சென்று ஆறுமுகப் பெருமான் மீது அருட்பாடல்களை, அருமையான பாடல்களை, பாடிப் பரவினார்.

முருக வேளுடைய திருவாக்கால் மந்திரஉபதேசம் பெற்றவர்கள் மூவர். அவர்கள் முறையே; சிவபெருமான், அகத்தியர், அருணகிரிநாதர் ஆகியோர் ஆவர்.

*அருணகிரிநாதர் அருளிய நூல்கள்*


**அழ. முத்துப்பழனியப்பன்,**

எம்.ஏ.பிஎல்.,

உதவி ஆணையர், கோவை

திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந் தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல்விருத்தம்,திரு எழு கூற்றிருக்கை ஆகியவைகளாகும். அருணகிரி தந்த திருப்புகழ்ப்பாக்கள் சுமார் 16000 என்பர். ஆனால் நமக்கு கிடைத்துள்ளவை 1300 பாடல்களேயாம். இந்தப் பாடல் களைத் தேடி அச்சிட்டுத் தந்த திரு. வ.த.சுப்பிரமணிய பிள்ளையவர்களும், அவர்கள் குமாரர் தணிகைமணி வ.சு.செங்கல்வராயப் பிள்ளை அவர்களும் போற்றுதற்கு உரியவர்கள்.

முருகவேளை நடுநாயகமான தெய்வமாகக் கொண்டு கணபதி, சிவபிரான், அம்பிகை, திருமால் ஆகிய கடவுளர்களை ஒப்பிலாவகையில் உயர்த்திப் போற்றுகின்றார்.

பொதுமகளிரை விலக்க வேண்டும், அடியார் வட்டத்தில் கலந்து இறைவன் திருவடி இன்பப் பேறடைய வேண்டும். தினையளவேனும் பிறருக்கு கொடுத்து உண்ண வேண்டும். என்பன அவரது பக்தி நெறியின் அடிப்படைக் கொள்கைகள் ஆகும். சந்தக்கவிராசர் அருணகிரியார் என்பதில் தவறில்லை. கிட்டத்தட்ட 1008 சந்தங்களில் அவரது பாடல்கள் உள்ளன. 16000 பாடல்களும் நமக்கு கிடைத்திருந்தால் எத்தனை சந்தங்களோ?

அவரது பக்தி நெறி எளிமையானது. இனிமையானது. எல்லாத் தெய்வங்களும் ஒன்றே இசையால் இறைவனை அடையலாம் இதுவே அவர் நெறி.

ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்'' என்று அவர் அறுவகைச் சமயங்களையும் உயர்த்திப் போற்றுகின்றார்.

சிவபரம்பொருளைப் போற்றுகின்றார். ஞானசம்பந்தப் பெருமானை முருகனின் அவதாரமாகவே கருதுகின்றார்.

''சிவஞானசித்தினை அருள்வாயே'' (582) என்று வேண்டுகின்றார்.

''............... ஏழை நான் உன்
பதிபசுபாசோபதேசம் பெற வேணும் (914)
என்று முருகப்பிரானை வேண்டுகிறார்.

அம்பிகையைப் போற்றும் போது.
தேவி அவதரித்த நாள்,
அவள் வாகனங்கள், அவள் வடிவழகு,
அவள் பராக்கிரமம், இப்படி
பல்வேறு நிலைகளில் அவளைப் புகழ்கின்றார்.

திருமாலைப்பாடும்போது, தானும் ஒரு ஆழ்வாராகவே ஆகிவிடுவார்.

''எந்தை வருக! ரகுநாயகவருக!
மைந்த வருக! மகனே இனி வருக!
என்கண்வருக! அரசே வருக அபிராம
இங்கு வருக! அரசே வருக! முலை
உண்கவருக! மலர்சூடிட வருக
என்று பரிவினொடு கோசலை புகலவ
ருமாயன்'' என்கிறார்

இவ்வாறு அறுவகைச் சமயக் கடவுளர்களைப் போற்றி, இறுதியில் தமது வழிபடு கடவுளான முருகக் கடவுளைப் போற்றி மகிழ்வார்.

இவ்வாறு வேறு எந்தக் கவிஞரும் காணாத ஒரு புதிய பக்தி நெறியை அவர் வகுத்ததற்குக் காரணம் காலத்தின் சூழலே எனலாம்.

தத்துவ நோக்கில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கும் இந்து சமயம் அடிப்படையில் ஒன்றேதான் என்பதைக் கூறுவதற்காக இவ்வாறு பாடினார் எனலாம்.

பக்திக்குத் தத்துவம் தேவையில்லை. அவரவர் எண்ணங்களுக்கும் அவரவர் சிந்தனைகளுக்கும் ஏற்ப, இந்து சமயத்தின் எந்தக் கடவுளையும் வணங்கலாம்.

அதனால் அருள்பெறலாம் என்பதே அவரது பக்தி நெறியின் அடிப்படை என்பதை உணர்தல் வேண்டும்.

இந்த அடிப்படையைக் கொண்டே அவர் நாட்டில் உள்ள எல்லாத்தலங்களையும் வழிபட்டார். அவ்வத்தலங்களில் உறைகின்ற தனது வழிபடு மூர்த்தியாகிய முருகப்பிரானை நீள நினைந்து போற்றி மகிழ்ந்தார்.

''சகல துக்கமுமறச் சகலசற்குணம் வரத்
தரணியில் புகழ்பெறத் தகைமை
பெற்றுனது பொற் சரணம் எப்பொழுதும்
நினைத்திட அருள் தருவாயே''

''ஆவி தளர்வுற்று வாடும் எனை
ஆசை கொடு அணைக்க வரவேணும்''

''அறிய அறிய அறியாத அடிகளறிய
அடியேனும்,
அறிவுள்அறியும் அறிவுற அருள்வாயே''
(விரிஞ்சிபுரம்)

''என்றனை வழிவழி அன்பு செய் தொண்டு
கொண்டருள் பெருமாளே''
(விராலிமலை)

இவ்வாறு முருகப் பிரானே சரணம், சரணம் என்றால் அவன் நினைத்த அத்தனையையும் தருவான் என்ற பெருநெறியை வழங்கினார். அருணகிரி வள்ளல்.

வேற்றிசை மலிந்த அக்காலத்தில் அவரது தமிழிசையால் திருப்புகழ் அனைவர் உள்ளங்களையும் உருக்கியது. அன்பு எனும் பெருநெறி சிறக்கத் துணைபுரிந்தது.

பக்திநெறி மீண்டும் தலைதூக்க அருணகிரிநாதர் கையாண்ட பாதை

அற்புதமானது. ஒரு புறத்தில் பிறமொழி ஆதிக்கம். இன்னொரு பக்கம் பிறமதத்தினர் ஆதிக்கம். மறுபுறம் சனாதானவாதிகளின் கூக்குரல், வேறு ஒரு புறம் ஆதிக்க சக்திகளின் ஆளுமை இவற்றிற்கிடையில் சாமானிய மக்களும் இறையருளை அடையவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் அவருடைய பக்திநெறி விரிவடைந்ததை நாம் காண முடிகிறது.

இகவாழ்வில் நமக்கு என்னென்ன வேண்டுமோ அவற்றை இறையருளால் அடையலாம். தனக்குக் குதிரை வேண்டும் என்று கேட்ட சுந்தரரின் தேவாரப்பாடல் இங்கே நினைவுக்கு வருகிறது. அதுபோல அருணகிரிநாதர் எளிய தமிழில் இனிய சந்தத்தில் இறைவனை வேண்டலாம். வேண்டியது எல்லாம் கிடைக்கும் என்ற புதிய நெறியை முன் வைக்கிறார்.

*''காலையில் எழுந்து உன் நாமமே மொழிந்து காதலுமை மைந்த'* என ஓத அருள் வேண்டுகிறார்.

மேலும்

*''இரவினிடைத் துயிலுகினும் யாரோடு*
*பேசுகினும்*
*இளமையும் உள் அழகுபுனை ஈராறு*
*தோள்நிரையும்*
*இருபதமும் அறுமுகமும் யானோத*
*ஞானமதை அருள்வாயே''*

என்று வேண்டுகிறார்.

எல்லா உலகத்திலும் வாழுகின்ற பக்தர்கள் நினைத்ததை முருகன் அருள்வான் என்பார்.

*''பதினாறு உலகத்தினில் உற்றுறு பக்தர்கள்*
*ஏது நினைத்தது மெத்த அளித்தரும் இளையோனே''*

முருகா என ஒரு தரம் சொன்னால் கூடப் போதும் முருகன் அருள்வான் என்கிறார்.

*''முருகா என ஒரு தரம் ஓத*
*அன்பர் முடிமேல் இணைதாள்*
*அருள்வோனே*

*''அறிவால் அறிந்துன் இருதாள் இறைஞ்சும்*
*அடியார் இடைஞ்சல் களைவோனே''*
என்றும்

*''வேண்டும் புலவர் அடியர் வேண்ட, அரிய பொருளை வேண்டும் அளவில் உதவும் பெருமானே''* ... என்றும்

*தஞ்சம் தஞ்சம் சிறியேன்*
*கொஞ்சம் கொஞ்சம் மதி துரையே அருள்''*...... என்றும் முருகப்பிரானிடம் வேண்டுவார்.

ஆக அருணகிரிநாதரின் அருள்நூல்களை நாம் அறியும்போது நாம் அறிவது இது தான்.

அருணகிரிநாதரின் பக்திநெறி எளிமையானது. இனிமையானது அழகுத்தமிழில்பாடி இறையருளை அடையலாம். குறிப்பிட்ட மொழியால்தான் இறைவனை அடைய முடியும் என்பதும் தவறு.

கடவுள் ''முத்தமிழால். வைதாரையும் வாழவைப்பவன்'' என்கிற உயர்ந்த சிந்தனையை அவர் கூறும் போது நாம் அசந்து விடுகிறோம்.

அவருடைய பக்திநெறி மக்கள் வயப்பட்டது. எளியோரும், இளையோரும், அவர்பால்; அவர் நெறியால் ஆட்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அவரைப் பற்றி உலவும் கதைகள் இவற்றைத்தாம் நினைவுபடுத்துகின்றன.

பெண் தொடர்பு வேண்டாம் என்று அவர் பாடுவது பொருட் பெண்டிர் உறவையே என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

இல்லறவாழ்வு வேண்டாம் என்று அவர் கூறவேயில்லை.

இந்து சமயத்தின் எல்லாப்பிரிவுகளையும், எல்லாத் தெய்வங்களையும் ஒருங்கிணைத்தது அவருடைய பெருஞ்சாதனை, இன்றுவரை அவர் நெறி தொடர்கிறது.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழே அறியாத ஒரு பெரியவர் திருப்புகழைப் பழனியில் கேட்டு, திருப்புகழே வாழ்வு என்று திருப்புகழைப் பரப்பி திருப்புகழ்சாமி'' என்று பெயர் பெற்று முருகன் அருள் பெற்று அற்புதங்கள் செய்ததை நினைவு கூற வேண்டும்.

அதன்பின் திருப்புகழையே வாழ்க்கை நெறியாகக் கொண்டு, பக்திநெறி பரப்பிய கிருபானந் தவாரியாரை நினைக்கலாம். தொடர்ந்து அருணகிரிநாதரின் பக்திநெறி கால்கொண்டு ஏற்று வருகிறது. அவருடைய பக்திநெறி தமிழகத்தின் அடிப்படை நெறி என்றால் தவறில்லை.

இவ்வாறு தொண்டு நெறி என்றும், தோழமை நெறி என்றும் மகன்மை நெறி என்றும், சிறந்த சைவ நெறியை 'சரண நெறி' என்ற உயர் கௌமார நெறி மூலம் இணைத்துப் பக்தி நெறிக்குப் புதியபாதையை வகுத்துத் தந்தவர் அருணகிரிநாதர்.

எனவே தாயுமானசுவாமிகள்.

*''ஐயா! அருணகிரி அப்பா உனைப்போல,*
*மெய்யாக ஓர் சொல்விளம்பினர் யார்?''* என்றும்
*''கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன*
*எந்தையருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ*
*என்றும் போற்றித் துதித்தார்.*

# மகா பாரதத்தில்
# குறளின் குரல்: வாக்கு தவறாதவர்?

மாலை நேரம்: கங்கைக் கரைஓரம். மாமன்னன் சந்தனு நதிக்கரை ஓரம் மெல்ல நடைபயில்கிறான். இயற்கையின் எழிலைப் பருகியபடியே வெகுதூரம் நடக்கிறான். கரையோர மரம் செடிகளின் மீது மாலை நேர மஞ்சள் வெயில் கண்ணா மூச்சி ஆடுகிறது. அந்த ஆட்டத்தில் மரம் செடிகளுக்குத் தங்க முலாம் பூசியது இயற்கை எனும் இளைய கன்னியின் அதிசயத் தூரிகை.

கங்கையின் நிர்மலமான நீரில் தங்க நிற மரங்களின் பிரதிபலிப்பு. அது மிக நீண்ட வெண்பட்டு ஆடையில் தங்க நிற ஜரிகை வேலைப்பாடு போன்ற பிரமிப்பு இது சிருஷ்டியின் அதிசயமோ? பிரமிக்கிறான். கூடு திரும்பும் நானாவித பட்சிகளின் சப்த ஸ்வரங்கள். சில்லென்று தழுவும் மென்காற்று, பல்வேறு பூக்களின் மணம் நாசியை நிறைக்க மெய்மறந்து நின்றான் சந்தனு.

நதிக்கரை ஓரம் நாணற்புதர் அருகே...

அழகின் மொத்த வடிவாய் ஒரு ஆரணங்கு, காந்தம் இழுபடும் இரும்பென அவள் அருகே செல்கிறான் சந்தனு. அவள் பேரழகு கண்டு பிரமித்து நிற்கிறான் என் உடல் பொருள் ஆவி அனைத்தும் உனக்கே அடைக்கலம், என்னை மணப்பாயாக என்றுகேட் கிறான். சம்மதிக்கிறேன் ஆனால் ஒரு நிபந்தனை என்கிறாள் அழகி. உனக்காக எந்த நிபந்தனையும் ஏற்பேன் என்கிறான் சந்தனு. என் பூர்வீகம் பற்றிக் கேட்கக்கூடாது. எனது செயல் எதனையும் தடுக்கக்கூடாது. அதுபற்றி விளக்கம் கேட்கக் கூடாது. அப்படி நீ மீறும் போது உனைவிட்டு விலகுவேன் என்கிறாள் பூடகமாக. சம்மதம் என்று சத்தியம் செய்து அவளை மணக்கிறான். மணவாழ்வின் மாபெரும், விளைச்சலாக அடுத்தடுத்து ஏழு ஆண்குழந்தைகள். அத்தனையையும் கங்கையில் வீசி எறிகிறாள் அவள் எட்டாவதாக ஓர் ஆண் குழந்தை பிறக்க அதனையும் கங்கையில் வீச முற்படுகிறாள் அழகி. தடுக்கிறான் மன்னன்

தாய்மை நலன் கொண்ட உனக்கு இது தகுமோ என்று ஏசுகிறான். அழகி சிரிக்கிறாள். பின்னர் பேச ஆரம்பிக்கிறாள்.

மன்னா! நான் மானுடப் பெண் அல்ல ''கங்காதேவி'' அஷ்டவசுக்கள் வசிஷ்டரின் பசுவான நந்தினியைக் கவர்ந்தனர். அதன் காரணமாக பூமியில் பிறக்கும்படி சாபம் ஏற்பட்டது. என்னைத் . தாயாகும்படி கேட்டுக்கொண்டனர் எனவே உன்னை மணந்து அவர்களைப் பெற்று சாபவிமோசனம் பெற வழி வகுத்தேன். பசுவைத் தொட்டு இழுத்த ''பிரபாசனே'' எட்டாவது குழந்தை அவன் பூமியில் நெடுங்காலம் வாழ்ந்து செயற்கரிய செயல்கள் செய்வான் என்பது வசிஷ்டரின் வாக்கு. எனவே இவனை உரிய காலத்தில் உன்னிடம் கொண்டு வந்து ஒப்படைப்பேன் என்று கூறி குழந்தையுடன் மறைகிறாள்.

ஆண்டுகள் பல ஆன பின் கல்விக் கேள்விகளில் தேர்ச்சி பெறச் செய்து தேவவிரதன் என்று பெயர் சூட்டி மன்னனிடம் ஒப்படைக்கிறாள்.

தேவ விரதனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி இனிதே வாழ்கிறான்

நாட்கள் கழிகின்றன ஒரு நாள் 'யமுனையில் நீராடும் போது ஒரு தெய்வீக மணத்தால் ஈர்க்கப்படுகிறான் சந்தனு மன்னன். மணம் வந்த திசை நோக்கி மனம் அலைபாயச் செல்கிறான். முனிவரின் அருளால் திருமேனியில் தெய்வீக மணத்தைப் பெற்றப் பரதவகுலமங்கை சத்தியவதியைக் காண்கிறான்.

என்னை மணந்துகொள் என்று மன்றாடுகிறான். தந்தையைக் கேளுங்கள் என்கிறாள்.

பரிமளசுகந்தியான சத்யவதியின் தந்தை விதித்த நிபந்தனை கேட்டு மன்னனின் தலை சுழல்கிறது. காதல் வசப்படவில்லையே என்ற வேதனையால் உடல் மெலிகிறான்.

விஷயம் அறிந்து தெளிகிறான் தேவ விரதன். சத்தியவதியிடம் செல்கிறான். அவள் தந்தை கேட் டபடியே சத்தியவதியின் வாரிசுகளே நாடாள்வர். நான் மணம் முடிக்காது பிரம்மச்சரியம் அனுஷ்டிப்பேன் என்று உறுதி கூறுகிறான். தந்தைக்குச் சத்தியவதியை மணம் முடித்துவைக் கிறான். 'பீஷ்ம' என்று போற்றி தேவர்கள் மலர்மாரி தூவுகின்றனர்.

கங்கையை மணந்து எட்டு பிள்ளைகளைப் பெற்ற பின்னும் சிற்றின்பம் நுகர்வதைத் துறக்க இயலாத தந்தைக்காகத் தான் சிற்றின்பம் துறப்பதைப் பேரின்பமாகக் கருதியவன் தேவவிரதன். பீஷ்மன் என்றால் செயற்கரியசெயல் செய்பவன் என்று பொருள். இதைவிட செயற்கரிய செயல் யாரால் செய்ய இயலும்?

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''
-குறள்.

கே. பாலசுந்தரி மாங்குடி

# திருக்கயிலாயம் - மானஸரோவர் - முக்திநாத்



## 16 நாட்கள் யாத்திரை *(Special Care for Senior Citizens)*

**10-ம் ஆண்டாக மே முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு புறப்படுகிறது**

**(பிரதோசம், பௌர்ணமி சமயத்தில் திருக்கயிலாயம் மானஸரோவரில் இருக்கலாம்)**

கயிலை பயணத்திற்கு சம்பள ஆட்களை அனுப்புவது இல்லை. 10 ஆண்டுகள் அனுபவமுள்ள நாங்களே உங்களுடன் சேவை செய்ய வருகின்றோம். இதுவே எங்கள் வெற்றிக்கு காரணம்.

கயிலை பயணத்திற்கு 4500 மாடல் புதிய சொகுசு டயோட்டா காரில் பயணம் ! கட்டணம் **ரூ.54,995/-** மட்டுமே.

| | |
|---|---|
| பிரதி மாதம் | 12 நாட்கள் சிம்லா, குல்லூ, மணாலி, டெல்லி, ஆக்ரா, சண்டிகர், மதுரா |
| செப்டம்பர் | 12 சோதிர்லிங்கம் - 30 நாட்கள் / நவசோதிர்லிங்கம் - 16 நாட்கள் |
| பிரதி மாதம் | 12 நாட்கள் கேங்டாக், டார்ஜிலிங், கொல்கத்தா, பூரி, புவனேஷ்வர் |
| பிரதி மாதம் | 12 நாட்கள் கேதர்நாத், பத்ரிநாத், ஹரிதுவார், ரிஷிகேஷ், டெல்லி |
| பிரதி வாரம் | சதுரகிரி மலை - 2 நாட்கள் / திருப்பதி - 2 நாட்கள் |

| | |
|---|---|
| ஜுன், ஜுலை | 15 நாட்கள் அமர்நாத் யாத்திரை (ஹெலிகாப்டர் வசதி உண்டு) |
| பிரதி மாதம் | அந்தமான் டூர் - 8 நாட்கள் (கப்பல்) / 5 நாட்கள் (விமானம்) |
| பிரதி மாதம் | 10 நாட்கள் பூரி, புவனேஷ்வர், கொல்கத்தா, கயா, காசி, அலகாபாத் |

**மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, துபாய், சீனா, மொரீசியஸ் சுற்றுலாக்களுக்கு அணுகவும்.**

நீங்கள் குழுவாக இருப்பின் நீங்கள் விரும்பும் தேதியில் விரும்பும் சுற்றுலாக்கள், யாத்திரைகள் நடத்தி தருகின்றோம்.
பள்ளி, கல்லூரி, ரோட்டரி, லயன்ஸ் கிளப் சுற்றுலாக்களுக்கு அணுகவும்.

குழுவாக வருபவர்களுக்கு கட்டண சலுகை உண்டு

**பெங்களூர் - 080 22879745**

ஒரு குழுவிற்கு 35 அன்பர்கள் மட்டும். அனைத்து உள்நாடு, வெளிநாடு சுற்றுலாக்களுக்கு அணுகவும் :

**மனோகர் டிராவல்ஸ்**
**2/176, பெரியண்ண வீதி, ஈரோடு - 1.**
**0424 - 2269940 செல் : 94433 80159**
**e-mail : manohartravvels@rediffmail.com**



**கைலாஷ் டிராவல்ஸ்**
**பெரியமேடு, சென்னை - 3.**
**044 - 42053923 செல் : 94433 80154**
**e-mail : kailashtravels_chennai@rediffmail.com**


# மயிலைவளர் கௌரி

**கௌரி** என்ற சொல் இளம் பெண், மயில், வெள்ளை நிறம் முதலான பொருட்களைத் தருகிறது மயில் வடிவில் தோன்றி தெய்வப் பெண்வடிவம் எய்தி அவரை மணந்து கொண்ட உமாதேவி மயிலாப்பூரில் கற்பகவல்லியாகக் காட்சியளித்துக் கொண்டிருக் கிறாள். சிறப்பு நாட்களில் அவளுக்கு வெண்மை வண்ண ஆடைகள் அணிவிக்கப்படுகின்றன. அதிகார நந்திசேவை. இடபவாகன விழா எட்டாம் நாள் அறுபத்து மூவர் விழா ஆகியநாட்களில் அம்பிகை வெள்ளுடையில் அருள்பாலிக்கின்றாள்.


# திருக்கோயில்

## திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
என்ற முகவரிக்கு அனுப்பவும்

# கலை உலகில் அறுபத்து மூவர்

திருஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள் முதலியோரின் அரிய திருத்தொண்டால் தமிழ் இலக்கியமும் சைவ சமயமும் புத்தொளி பெற்றன. அதன் விளைவால் கலையுலகில் மாபெரும் புதுமைகள் தோன்றின. கோயிற்கலைகள் மாபெரும் வளர்ச்சி பெற்றன.

மண்ணாலும் மரத்தாலும் இருந்த கோயில்கள் கற்கோயில்களாக மாற்றம் பெற்றதுடன் கலையரசியின் எழில் சிம்மாசனங்களாகின. கலை நுணுக்கம் மிக்க வேலைப்பாடுகளும் பெருகின.

புராணக் காட்சிகள் கோயில்களில் உயிர் ஒவியங்களாக வெளிப்பட்டன. அந்த வரிசையில் பெரிய புராணக் காட்சிகளாக நாயன்மார்களின் வரலாறுகள் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் உருவம் பெற்று மக்களை மகிழ்வித்தன. இரண்டாம் இராஜராஜனால் கட்டப்பட்ட தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்தில் கருவறை புறச் சுவரில் சிறிய அளவில் வரிசையாக நுணுக்கமான கலை வேலைப்பாடுகளுடன்



அறுபத்து மூவர் வரலாற்றுக் காட்சிகள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன. இதுவே அதிக சிறப்பு வாய்ந்த அறுபத்து மூவர் சிற்ப வரிசையாகும். இந்தச் சிற்பங்களின் மேல் பெரிய புராணத் தொடர்கள் ஆங்காங்கு பொறிக்கப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக மெய்ப் பொருள் நாயனார் சிற்பத்தின் மேல் அப்புராணத்தில் வரும் "தத்தா நமர்" என்று சொற்றொடர் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில், ஆங்காங்கு பெருமான் இடபத்தின் மேல் உமையுடன் அமர்ந்து காட்சியளிப்பது சிறப்புடன் காட்டப்பட்டுள்ளது.

சுற்றுச்சுவர்களிலும் தூண்களிலும் கருவறை அமைப்பதை விடுத்து விமானத்தில் வரிசையாக அறுபத்து மூவரை அமைத்திருப்பதைத் திருமழிசை ஒத்தாண்டேசுவரர் ஆலயத்தில் காண்கிறோம்.(கஜப்பிருஷ்ட) தூங்கானை மாட வடிவில் அமைந்த இந்த விமானத்தின் கண்டப் பகுதியில் அறுபத்து மூவர் வரிசையாகச் சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளனர். முகப்பில் சோமாஸ்கந்தர் இடம்பெற்றுள்ளார். இது வேறெங்கும் இல்லாத அதிசய அமைப்பாகும்.

புடைப்புச் சிற்பங்களாக அமைக்கும் நிலைமாறி அறுபத்து மூவரையும் தொகையடியார்களையும் கல் திருமேனிகளாக அமைத்து வழிபடும் வழக்கம் தோன்றியது. கயிலாயம் வடக்கில் இருப்பதால் தெற்குப் பிரகாரத்தில் இவர்களை வடக்கு

**- பூசை. ச. அருணவசந்தன்.**



நோக்கியவாறு அமைத்தனர். இவ்வரிசையில் இவர்களைப் போற்றிப் பரவிய சுந்தரரை முதலிலும், இவர்களது புராணத்தைப் பாடிய சேக்கிழாரை இறுதியிலும் அமைத்து வழிபடுகின்றனர்.

சிற்பங்களாக அமைக்க முடியாத போது வரிசையாக வண்ண ஓவியங்களாகத் தீட்டி வைத்தனர். பின்னாளில் சுவர்களில் வண்ண ஓவியங்களைத் தீட்டியதுடன் முன்புறம் மேடை அமைத்து அதில் வரிசையாக நாயன்மார்களை அமைக்கும் வழக்கமும் வந்தது. அம்முறை இன்னும் பல கோயில்களில் உள்ளது. படத்தின் கீழ் பெயரையும் அவர்கள் வீடு பேறு பெற்ற நாளையும் குறித்து வைத்துள்ளனர்.

இந்நிலை வளர்ந்து உலோகச் சிலைகளை அமைத்துப் பூசிக்கும் வழக்கம் தோன்றியது. பெரிய தலங்கள் பெரும்பாலானவற்றில் அறுபத்து மூவரை கல் திருமேனியாகவும் உலாத் திருமேனியாகவும் காண்கிறோம்.

சென்னை மாநகரில் மயிலை கபாலீசுவரர், சைதை காரணீசுவரர், திருஒற்றியூர் தியாகராஜர் ஆலயம் முதலியவற்றில் அறுபத்து மூவர் உலாத் திருமேனிகள் உள்ளன.

மயிலை கபாலீசுவரர் ஆலய அறுபத்து மூவர் விழா உலகப் புகழ்பெற்றதாகும். பங்குனி மாதப் பெருந்திருவிழாவின் எட்டாம் நாள் மாலையில் வெள்ளி விமானத்தில் கபாலீசுவரர், கற்பகவல்லி பவனிவர, அறுபத்து மூவரும் தொகையடியார் களும் அவர்களைத் தொழுத வண்ணம் விமானங்களில் எழுந்தருள்வது கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்விழாவில் பெருந்திரளானவர்கள் கலந்து கொள் கின்றனர்.

திருக்கழுக்குன்றத்தில் சித்திரைப் பெரு விழாவின் மூன்றாம் நாள் அதிகார நந்தியில் பெருமான் மலை வலம் வர அறுபத்து மூவரும் உடன் வருகின்றனர். அச்சிறுப்பாக்கத்திலும் அதிகார நந்தி சேவன விழாவின்போது அவருடன் அறுபத்து மூவரும் உலா வருகின்றனர். அன்பர்கள், இல்லங்களில் தஞ்சாவூர் கலைப்பாணியில் அறுபத்து மூன்று நாயன்மார்களையும் தொகையடியார்களையும் கீழ் மேலாகவும் இடம் வலமாகவும் அமைந்த கட்டங்களில் வரைந்து அவர்களுக்கு மேல் நடராசர், சிவசாமி நந்தி, பிருங்கி விநாயகர், முருகன் ஆகியோரை அமைக்கும் வழக்கம் மேற்கொண்டனர். செட்டி நாட்டில் பலருடைய வீடுகளில் இத்தகைய பெரிய படத்தைக் காண்கிறோம். சேக்கிழார்பேரிலும் பெரியபுராணத்தின் பேரிலும் அதிக பக்தியுடையவர்கள் இத்தகைய படங்களை அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

இப்படி ஒரே படத்தில் இல்லாமல் தனித்தனி படங்களாக வரைந்து வரிசையாக சுவரில் மாட்டி வைக்கும் வழக்கம் தோன்றியது. சைவ மடங்கள், சைவ சமய சபைகளில் இம்முறை கையாளப்பட்டுள்ளது. வேலூர் அப்பர் சுவாமிகள் மடம். குன்றத்தூர் திருமடம் ஆகியவற்றில் இக்காட்சியைக் காணலாம். தங்கரேக்கு ஒட்டப்பட்ட இவை கலைச்

சிறப்புடையவையாகும்.

அச்சகங்கள் தோன்றிய பின்னர் அறுபத்து மூவர் படங்களை அநேகர் அச்சிடத் தொடங்கினர். முதல் பெரிய புராணப் பதிப்பில் 108 பாடல்களாக அறுபத்து மூவர் வரலாறு இடம் பெற்றது. இவை வரை கோட்டுப் படங்களாகும். (Line Drawing) இவை உன்னதமானவை. ஓவியர் சித்ரலேகா அவர்கள் அறுபத்து மூவரைத் தொகையடியார்களுடன் பல்வண்ணப் படமாகத் தீட்டினார். இது பல பத்திரிகைகளில் வெளிவந்தது.

ஓவியர் இராஜம் அவர்கள் பழங்கலை மரபில் அறுபத்து மூவரின் வரலாற்றுக் காட்சிகளைத் தீட்டினார். இது சித்திரப் பெரியபுராணம் என்ற நூலாக வெளிவந்துள்ளது.

அண்மைக் காலத்தில் அண்ணாமலையாரின் (உலாத் திருமேனி) வண்ணப்படத்தைச் சுற்றி அறுபத்து மூவர் சிதம்பரம் நடராசரைச் சுற்றிலும் அறுபத்து மூவர் என்று தத்தம் எண்ணத்திற்கேற்ப அறுபத்து மூவர் படங் களை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். அன்பர் கள் இவற்றை இல்லங்களில் வைத்துப் பூசிக் கின்றனர். இன்னும் பல கலை வடிவங்களில் அறுபத்து மூவரை அமைத்துக் கலைஞர்கள் சைவத்தையும் பெரிய புராணத்தையும் சிறப்பித்துள்ளனர். இனியும் சிறப்பிப்பார்கள்.

---

*திருமயிலை கபாலீசுவரர் திருக்கோயில் அறுபத்து மூவர் விழா*
*நாள். 19-03-2008 புதன் கிழமை.*



*சிவகெங்கை மாவட்டம், காரைக்குடி நகர், மீனாட்சிபுரம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலின் பயன்பாட்டிற்காகவும், பக்தர்களுக்கு கூடுதல் வசதி செய்து கொடுக்கும் வகையிலும் காரைக்குடி அ.ஜபாருதீன் அவர்கள் தமக்கு சொந்தமான இடத்தினை மனமுவந்து நியாயமான விலையில் திருக்கோயிலுக்கு வழங்கினார். அதற்கான காசோலையினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் அன்னாரிடம் வழங்கினார். உடன் காரைக்குடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப. துரைராஜ் அவர்கள் திருக்கோயில் நிர்வாக அதிகாரி திரு.ஆர். அர்ஜுனன் ஆகியோர்.*


சிவ சிவ







# மயிலை சித்திரக் கோபுரத்திற்கு திருக்குட நன்னீராட்டு விழா

இசையுலகில் புகழ்பெற்ற பாடல் 'கற்பக வல்லி நின் பொற்பாதங்கள் பிடித்தேன்' என்பது. அதில் ஒரு தொடர் அவளுடைய கோயிலை 'சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக்கோயில்' என்று சிறப்பிக்கிறது. உபசாரமாக இன்றி உண்மையிலேயே சிற்பங்கள் நிறைந்ததாகவும் சித்திரக் கோபுரம் கொண்டதாகவும் மயிலை கபாலீச்சரம் விளங்குகிறது. சித்திக்கோபுரம் உயர்ந்த கலை வேலைப்பாடுகள் கொண்டது. சிவபெருமானின் அட்டவீரட்ட செயல்களும் அதி உன்னதமாக அமைக்கப்பட்டுள்ளன.

அதைவிட அடியவர்கள் வாழ்வில் நடைபெற்ற அற்புதக் காட்சிகள் சில கோர்வையாக இடம்பெற்றுள்ளன. திருஞான சம்பந்தருக்கு சிவபார்வதியார் காட்சியளிப்பது, அம்பிகை பால் ஊட்டுதல், பெருமான் சம்பந்தருக்கு முத்துக்குடை, முத்துச்சிவிகை விருதுகள் தருதல், பாண்டியனின் வெப்புநோய் தீர்த்தல் முதலிய காட்சிகளை காணுகிறோம். பூஞ்சோலையில் கமலினி, அணிந்திரை மலர்பரித்துக்கொண்டிருக்க சுந்தரர் அவர்களை பார்ப்பது, இறைவன் சுந்தரரின் திருமணத்தை தடுத்து ஓலைக்காட்டி ஆட்கொள்ளுதல், முதலையுண்ட பாலனை உயிர்ப்பித்தல் முதலியவற்றை காண்கிறோம். மாணிக்கவாசகர் வரலாற்று காட்சிகளில் பெருமான் அவருக்காக மண்சுமப்பது பிரம்மடி படுவது, பட்டோலையில் திருவாசகத்தை எழுதிக்கொள்வது முதலியன சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இவை வேறெங்கும் காணமுடியாத அற்புதப் படைப்புகளாகும்.

இன்னும் அஷ்டமங்களை ஏந்திய அப்சரப் பெண்கள், துவாரபாலகியர் அஷ்ட பைரவர்கள், அஷ்ட திக்குப் பாலகர்கள் இடம்பெற்றுள்ளனர்.

நவீன கால புராண ஓவியங்களில் சிறப்புப் பெற்ற இராஜா இரவிவர்மாவின் ஓவியங்களும் இங்கே சிலைவடிவம் பெற்றிருப்பது தனிச்சிறப்பாகும். ரிஷப குஞ்சரத்தில் சிவபெருமான் பிச்சையேற்க திருமகள் பிச்சையிடல், கங்கை அவதரணம் தத்தாத்திரேயர் முதலிய ஓவியங்களை இங்கே சிற்பமாகக் காண்கிறோம். சிற்பக்கலைக் களஞ்சியமாகத் திகழும் இராஜகோபுரத்திற்கு முழுவதுமாக பஞ்சவர்ணம் தீட்டி கலசங்களுக்கு மெருகூட்டி திருப்பணி செய்து 28.02.2008ம் நாளன்று குடமுழுக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது. இக் குடமுழுக்கு விழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர் பெரியகருப்பன் அவர்கள். வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு. த. பிச்சாண்டி அவர்கள் அறங்காவலர்குழுத்தலைவர் டாக்டர் நல்லி. என் குப்புசாமி செட்டியார் அவர்கள், அறங்காவலர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்களும் சேவார்த்திகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# நத்தம் பரமேஸ்வரமங்கலம் சிவன்

செண்பக வனத்தில் தோன்றிய இறைவனைத் திருமகள் லட்சுமி பூஜித்த தலம். 1200 ஆண்டுகளுக்கு முன்பு நிருபதுங்கவர்ம பல்லவன் எழுப்பிய ஆலயம். முதலாம் பராந்தக சோழனால் கற்றளியாக்கப்பட்ட பெருமை கொண்டகோயில். சோழர், பாண்டியன் என மன்னர்கள் பலராலும் திருப்பணி செய்யப்பட்ட ஆலயம். கருவறை சுவர் முழுக்க கல்வெட்டுகள் நிறைந்த தலம். சோழ அரசி தந்தி விடங்கிப் பிராட்டியால் தரிசு நில மேம்பாடு மேற்கொண்ட பூமி. கிராம வாரியம், மகாசபை என உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்ட ஊர். நர்த்தன விநாயகர், பிரம்மசாத்த சுப்பிரமணியர், அரியார், துர்க்கை பிட்சாடனர் என அபூர்வமான சிற்பங்களைக் கொண்ட கோயில். ராமர் சீதை, லட்சுமணன் விளங்கும் தலம். ஏழு கோட்டங்கள், ஏழு சிவலிங்கங்கள் கொண்டுள்ள ஆலயம். பாலாற்றங்கரை அருகே அமைந்த திருக்கோயில். நந்திதேவர் வெளிவாயிலை நோக்கிய தலம் என பெருமைகள் பலவற்றை கொண்ட திருத்தலமாக விளங்குவது. காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டத்தில் உள்ள நத்தம் பரமேஸ்வர மங்கலம் செண்பகேசுவரர் திருக்கோயில்.

தொன்மைச் சிறப்புகள்

இச்சிவாலயத்தின் கருவறைச் சுவர் முழுக்க கல்வெட்டுகளால் பொறிக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் இந்த ஆலயத்துக்கு தரப்பட்ட கொடைகள் குறித்த விவரங்கள், உள்ளாட்சி அமைப்புகள், தரிசு நில மேம்பாட்டு திட்டம் போன்ற அரிய வகை விவரங்களை அறியமுடிகிறது.

இவ்வூர், கி.பி. 1015ல் முதலாம் ராஜேந்திர சோழன் காலத்தில் நிகரிலி சோழமங்கலம் என்றும் மூன்றாம் ராஜராஜன் சோழன் காலத்தில் சோழ குல சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பட்டது.

கி.பி. 884 இல் நிருபதுங்கவர்ம பல்லவனால் தோற்றுவிக்கப்பட்ட இந்த சிவாலயம், முதலாம் பராந்தக சோழன் காலத்தில் கற்றளியானது.

### தரிசு நில மேம்பாடு

சோழ அரசி தந்தி பிராட்டியார் அவர்கள், கோயிலின் மடப்புர, தேவதான தரிசு நிலங்களையெல்லாம் வேளாண்மைக்கு ஏற்ற நிலமாக மேம்படுத்தி, அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் சித்திரை, ஐப்பசி மாத விசுக்களுக்கும் மாசிமக உற்சவங்களும், குளிர்கால, கோடை கால உற்சவங்களும் ஏற்பாடு செய்தாள்.

இன்றைய தரிசு நில மேம்பாட்டு திட்டத்தினை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சோழ அரசியார் செயல்படுத்தியது பாராட்டத்தக்கது.

### கொடைகள்

கி.பி.1015ல் முதலாம் இராஜேந்திரசோழன் இவ்வூரில் சத்வஞ்சர வாரிய சபையைக்கூட்டி, கோயில் மற்றும் ஊர் வளர்ச்சி பற்றி ஆய்வு மேற்கொண்டான். கி.பி.1018ல் வழிபாட்டில் பிரசாதம் மற்றும் உணவு வழங்க 12 உறுப்பினர்களை நியமித்துள்ளான்.

கி.பி. 1200இல் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் திருக்கோயிலை புனரமைத்து கோயிலின் எதிரில் கல்மண்டபம் கட்டினான். இதனை முறைப்படி ஆவணப் பதிவும் செய்துள்ளான்.

இதே போல, மாறவர்ம சுந்தரபாண்டியன் கி.பி. 1229 இல் பழம்பட்டின பெருமன்றத் தாழ்வார் என்பவர் இவ்வாலயத்தினை பராமரித்து வந்த செய்தியை இவ்வாலயத்தில் அமைந்துள்ள ஏழு கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

### சுப்பிரமணியர்

இவ்வாலயத்தில் அழகிய சுப்பிரமணியர் கி.பி. 1015 இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் நிறுவப்பட்டது என்பதை இவ்வாலயத்திலுள்ள மூன்று கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. இம்மன்னன் உருவாக்கிய சதஸ் சாலையில் ஒவ்வொரு ஆண்டும், துலாமாதத்தில் கிராம வாரிய உறுப்பினர்கள் கூடி மகாசபை நடத்திய விபரங்கள் தெரியவருகிறது.



### ஆலய அமைப்பு

பாலாற்றங்கரையில் கிழக்கு முகமாக இவ்வாலயம் அமைந்துள்ளது. சுற்றுச்சுவர் ஏதுமின்றி ஆலய கருவறைகளை தவிர அனைத்துமே சிதிலமடைந்து சிதறிக்கிடக்கின்றன.

துவாரபாலகர் முதலிய சிலைகள் பின்னப்பட்டுள்ளதால் தனித்தனியே வைக்கப்பட்டுள்ளன. மூன்றாம் குலோத்துங்க சோழன் எழுப்பிய மண்டபம்(கி.பி. 1210) சிதிலமடைந்துள்ளது. எழிலான நந்திதேவர் கம்பீரமாய் வெளிப்புறம் நோக்கிய வண்ணம் அமர்ந்துள்ளார்.

ஆலயத்தைச் சுற்றிலும் ஏழு கோட்டங்கள். அமைக்கப்பட்டு அதில் பிச்சாடனர், விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்ம தேவர், துர்க்கை, ஹரிஹரர் என ஏழு சிற்பங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. இவை அழகுடன் அமைந்திருந்தாலும் பின்னப்பட்டு இருப்பது மனதை வருத்துகின்றது.

கோயிலின் கருவறையை சுற்றிலும் வெளிப்புறத்தில் ஆறு சிவலிங்கங்கள் உள்ளன. மூலவர் ஏழாவது சிவலிங்கமாக விளங்குகிறார். கயிலாச நாதர், செண்பகேஸ்வர்(மூலவர்), அருணாசலேஸ்வர், ஜகதீஸ்வர், ஏகாம்பர நாதர், வால்மீகி நாதர், வியாக்கிரபாதேஸ்வர் என்று இவர்களை இப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.

என்றாலும் திருவண்ணாமலை தலத்தினைப்

போலவே மூலவர் தவிர்த்து எட்டு திசைகளிலும், எட்டு சிவலிங்கங்கள் அமைந்திருக்க வேண்டும். காலப்போக்கில் இவை காணாமல் போயிருக்கலாம் என்று நம்புகின்றனர்.

இங்குள்ள தெய்வங்களுள் பிட்சாடனர் மற்றும் ஹரிஹரர் உருவங்கள் கி.பி.1015 இல் முதலாம் இராஜேந்திர சோழனால் உருவாக்கப் பட்டவையாகும்.

### அபூர்வ சுப்ரமணியர்

கருவறை நுழைவுவாயிலில் வலது புறம், கெண்டி அட்சமாலை தாங்கிய சுப்பிரமணியர் சிலை அமைந்துள்ளது. இவரை சிற்பநூல்கள் பிரம்ம சாத்தன் என்று கூறுகின்றன.

### வெளிவாயிலை நோக்கும் நந்திதேவர்

இது லட்சுமிதேவி பூஜித்த தலம் என்பதற்குச் சான்றாக கருவறைச் சுவரில் துர்க்கை கோட்டத்திற்கு அருகே மகாலட்சுமியின் புடைப்புச் சிற்பம் ஒன்று அமைந்துள்ளது.

மகாலட்சுமிதேவி இங்கு செய்துவரும் பூஜைக்கு இடையூறு ஏற்படாமல் காத்திட,நந்தி தேவர் வெளிவாயிலை நோக்கிக் காவல் இருப்பதாக ஐதீகம்.

### இறைவன். இறைவியர்

இத்தலத்து இறைவன் செண்பகவனத்தில் தோன்றியவர் ஆதலால் செண்பகேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார் எளிய உருவில் அழகுடன் சிவலிங்கத்திருமேனியாக இறைவன் காட்சி தருகிறார்.

இறைவியின் பெயர் சௌந்திரநாயகி. அன்னையின் சந்நிதி தெற்குநோக்கியவாறு கருவறைக்கு வெளியே தனியாக அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் அருகே சண்முகர் சந்நிதியும் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தில் முதல்வழிபாடு அம்பிகைக்கே செய்யப்படுகிறது. அதன் பிறகே மற்ற தெய்வங்களுக்குப் பூஜைகள் நடைபெறுகின்றன இதற்கான காரணம் அறியப்படவில்லை.

நத்தத்தில் மேலும் ஒரு சிவாலயமும், வைகுண்ட பெருமாள் ஆலயமும் உள்ளன

இவ்வூரின் அருகே ஓடும் பாலாற்றின் நடுவில் சிறிய மணல் குன்றின்மீது கயிலாசநாதர் சிவாலயம் எழிலுடன் அமைந்துள்ளது. இது கி.பி. 884இல் நிருபதுங்கவர்ம பல்லவ மன்னரால் எழுப்பப்பட்டது. இக்கோயிலில் சோமவார பூஜை மற்றும் பங்குனி உத்திரப் பெருவிழா மட்டுமே நடைபெறுகிறது.

இதே சமகாலத்தைச் சார்ந்த வைகுண்டப் பெருமாள் சந்நிதி எளிய அமைப்பில் அமைந்துள்ளது. இங்குள்ள மூலவர் வெகு நேர்த்தியான அழகுடன் எழுந்தருளியுள்ளார்.

இவ்வாலயத்தில் மார்கழி மற்றும் புரட்டாசி மாத உற்சவங்கள் எளிய முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

சிவாலயத்தில் இப்போது காணப்படும் ராமர், சீதை, அனுமன் சிலைகள் இக்கோயிலிருந்து அங்கே இடம் பெயர்ந்திருக்க வாய்ப்புண்டு.

### விழாக்கள்

சித்திரை மாதப் பௌர்ணமியில் திருக்கல்யாணமும், வீதியுலாவும் நடைபெறுகின்றன மேலும் ஆவணியில் விநாயகர் சதுர்த்தி, புரட்டாசியில் நவராத்திரி, கார்த்திகை சோமவாரவிழா, மார்கழி ஆருத்ரா, மாசி சிவராத்திரி மற்றும் பிரதோஷங்கள் எளிய முறையில் நன்கு நடத்தப்பட்டு வருகின்றன.

### அமைவிடம்

நத்தம் பரமேஸ்வரமங்கலம் சென்னைக்கு தென்மேற்கே 80 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சொந்த வாகனத்தில் வரவிரும்புவோர் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கல்பாக்கம் வந்து, புதுச்சேரி நோக்கி தெற்கே ஏறத்தாழ 5. கி.மீ. பயணம் செய்தால் பாலாறு வரும். அதனை தாண்டியதும் வேப்பஞ்சேரி என்ற ஊர் வரும். இதிலிருந்து மேற்கே 4.கி.மீ. பயணம் செய்தால் பரமேஸ்வரமங்கலம் வரும். இவ்வூரை அடுத்து நத்தம் கிராமம் வரலாம்.

சென்னையில் இருந்து பேருந்தில் வருவோர் 188டி எண் கொண்ட அணைக்கட்டு பேருந்தில் நத்தம் கூட்டு சாலையில் இறங்கி 1 கி.மீ. வடக்கே நடந்தாலும் நத்தம் வரலாம்.

இதே போல கல்பாக்கத்தில் இருந்து காத்தான் கடைக்கு ஷேர் ஆட்டோ வசதி உள்ளது. அங்கிருந்து அணைக்கட்டு நோக்கி 3. கி.மீ. மேற்கிலும், நத்தம் கூட்டு சாலையில் இருந்து வடக்கே 1 கி.மீ பயணம் செய்தாலும் நத்தம் வரலாம்.

### ஆலயம் திறக்கும் நேரம்

காலை மாலை இருவேளைகளிலும் ஆலயம் திறந்திருக்கும். என்றாலும், அர்ச்சகரின் வீடு ஆலயத்தின் அருகிலேயே இருப்பதால் அடியார்கள் ஏமாற்றமின்றி இறைவனைத் தரிசிக்கலாம்.

பல்லவர், சோழர், பாண்டியர் என மன்னர்கள் பலரும் போட்டியிட்டு திருப்பணி செய்து வழிபட்டு வந்த இந்த பெருமைமிகு, சிவாலயத்தைப் புனரமைத்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரவேண்டியது, ஒவ்வொரு சிவனடியாரின் தலையாய கடமையாகும்.

படைப்பும், படமும்: பனையபுரம் அதியமான்

- சென்ற இதழ் தொடர்ச்சி

திருக்கச்சி நம்பி மகிழ்வுடன் ஸ்ரீகாஞ்சி பெருமாளுக்கு ஆலவட்டம் கைங்கர்யம் நாள்தோரும் குறைவறச் செய்து வந்தார். தினந்தோறும் திருக்கச்சி நம்பிகள் நீராடிவிட்டு , திருக்கோயிலுக்கு வரும்போது, அவருடைய திருவடி பட்ட மண்ணை ஒரு திருக்குலத்தை சேர்ந்தவர்,தன் கையால் பக்தி சிரத்தையுடன் எடுத்து அணிந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இதனைக் கவனித்த திருக்கச்சி நம்பிகள் ஒரு நாள் அந்த திருக்குலத்தாரிடம் ஏன் இவ்வாறு என் காலடிபட்ட மண்ணை எடுத்து அணிந்து கொள்கிறீர் என வினவ அதற்கு அவர் மோட்சம் அடைய இவ்வழியைத் தவிர வேறொன்றும் அறியேன் என்றார்..

இதனை மனதில் சிந்தித்துக்கொண்டே திருக்கோயிலை அடைந்து ஸ்ரீகாஞ்சி வரதராஜ பெருமாளுக்கு ஆலவட்ட கைங்கர்யம்(விசிறி வீசுதல்) செய்து கொண்டே பெருமாளிடம், என் காலடி மண்ணை எடுத்து அணிந்து கொண்டு மோட்சம் அடைய வேறு வழி அறியேன் என்று சொன்ன அந்த திருக்குலத்தை சேர்ந்தவருக்கு மோட்சம் உண்டோ என வினவ அர்ச்சாவதார மூர்த்தியாக இருந்த ஸ்ரீ காஞ்சிப் பெருமாள் கற்சிலை நிலையைக் கடந்து வாய்திறந்து உறுதியாக அவர் மோட்சத்தை அடைவார் என திருவாய் மலர்ந்தருளினார்.

ஸ்ரீகாஞ்சி வரதராஜ பெருமாள் திருக்கச்சி நம்பிகளிடம், அர்ச்சா ரூப நிலையை கடந்து, நேரில் பேசியவர், அப்படிப்பட்ட பெருமைக்குரிய திருக்கச்சி நம்பிகள் பெருமாளிடம் பெருமாளே எனக்கும் மோட்சம் தாருங்கள் என வேண்டவும், பெருமாள், ''நீர்! ஒரு பரம பாகவதரின் அபிமானத்தைப் பெற்றால் தான் உமக்கு மோட்சம் கிடைக்கும் என்றார்.

உடனே திருக்கச்சி நம்பிகள், ஸ்ரீவரதராஜ பெருமாளிடம் அனுமதி, பெற்று திருக்கோட்டியூர் நம்பியிடம், அவர் திருமடத்து மாடுகளை மேய்க்கும் கைங்கர்யத்தை மாறுவேடமிட்டு தொண்டு செய்து, திருக்கோட்டியூர் நம்பியிடம் நம் பையல் என்ற அபிமான வார்த்தையைப் பெற்றார். அந்த அபிமான வார்த்தையினை காட்டியே, திருக்கச்சி நம்பிகள் ஸ்ரீவரதராஜ பெருமாளிடம் மோட்சம் பெற்றார் என்பார்கள்.

திருக்கச்சி நம்பிகளிடம், ஸ்ரீகாஞ்சி வரதராஜ பெருமாள், நேரில் பேசக்கூடிய உயர்ந்த நிலையில் இருந்தும் மோட்சம்பெற பரம பாகவதரின் அபிமானத்தைப் பெற்றால் மட்டுமே, ஆச்சார்யார்களின் அனுக்கிரகம் இருந்தால் மட்டுமே, மோட்சம் பெற முடியும் என்பதை ஸ்ரீகாஞ்சி வரதராஜ பெருமாள் திருக்கச்சி நம்பிகள் கூறியதன் மூலமாக நமக்கெல்லாம் பரம பாகவதர்களில் மட்டிலா உயர்வை எடுத்துக்காட்டி இருக்கிறார்.

என்னே ஸ்ரீ வைஷ்ணவத்தில் பெருமாள், தமது அடியார்களாகிய பரம பாகவதர்களுக்கு எவ்வளவு ஏற்றம் கொடுத்திருக்கிறார் என்பது திருக்கச்சி நம்பியின் வாழ்வில் நடந்த இந்த



# உலகம் உய்ய உதித்த உடையவர்

நிகழ்ச்சி ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது. திருக்கச்சி நம்பிகள் தேவராஜ அஷ்டகம் என்ற துதி நூலையும் இயற்றியுள்ளார்.

எனவே, ஆச்சார்யர்களின் அருள் அல்லது அபிமானத்தை பெற வேண்டியது, ஒரு உண்மையான வைஷ்ணவனுக்குத் தேவை என்பதை ஸ்ரீவைஷ்ணவ குரு பரம்பரையி னரான நாம் இத்தருணத்தில் தெரிந்து கொள்ள வேண்டியது மிக்வும் அவசியமாகும்.

ஸ்ரீவைஷ்ணவ குரு பரம்பரை பெருமாளிடம் இருந்து பிராட்டிக்கும், பிராட்டியிடமிருந்து சேனை முதலியாருக்கும், சேனை முதலியாரி டமிருந்து நம்மாழ்வாருக்கும், நம்மாழ் வாரிடமிருந்து ஸ்ரீமத் நாத முனிகளுக்கும் வருகிறது சகல வேத சாஸ்திர ரகசியயார்த்தங் களும் இப்படிப் பரம்பரை பரம்பரையாக வந்துள்ளன.

இவர்களை முறைப்படி வணங்கும் வகையில் ஸ்வாமி தேசிகன் அருளிய பாடல் ஒன்று அமைந்துள்ளது அது.

``என்னுயிர் தத்தளித்தவரைசரணம் புக்கி
யாவடைவேன்
அவர் குருகணிகரை வணங்கி.
பின்னருளாள் பெரும்புதூர்ச்
வந்த வள்ளல், பெரிய நம்பி, ஆளவந்தார்
மணக்கால்
நம்பி, நன்னெறியை அவர்குரைத்த உய்யக்
கொண்டார் நாதமுனி சடகோபன்
சேனைநாதன்
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு''
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே
என்பதாகும்.

ஆச்சார்யார்களை பாதாதி கேசமாகவும், கேசாதி பாதமாகவும் போற்றும் நாமாவளிகள் உள்ளன. பாதாதி கேசமாக அமைந்த நாமாவளி பின்வருமாறு:

*1. ஸ்ரீமதே வேதாந்த குருவே நம:*
*(வேதாந்த தேசிகன்)*

*2. ஸ்ரீமதே ராமானுஜாய நம:*
*(ஸ்ரீராமானுஜர்)*

*3.ஸ்ரீபராங்குசதாசாய நம:*
*(ஸ்ரீபெரிய நம்பி)*

*4. ஸ்ரீமந் யமுனா முநயே நம:*
*(ஸ்ரீ ஆளவந்தார்)*

*5.ஸ்ரீராம மிச்ராய நம:*
*(மணக்கால் நம்பி)*

*6. ஸ்ரீ புண்டரீ காட் சாய நம:*
*(உய்யக் கொண்டார்)*

*7. ஸ்ரீமத் நாதமுனியே நம:*
*(ஸ்ரீமந் நாதமுனிகள்)*

*8. ஸ்ரீமதே சடகோபாய நம*
*(நம்மாழ்வார்)*

*9. ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம*
*(விஷ்வக்சேனர்)*

*10. ஸ்ரீ ச்ரியை நம*
*(மகாலெட்சுமி)*

*11. ஸ்ரீதராய நம*
*(ஸ்ரீகிருஷ்ணர்)*

ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளிய ஆச்சாரியார்கள் மூவர், ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீமகாலெட்சுமி, ஸ்ரீ விஷ்வக்சேனர்.

பூவுலகில் மானிடராகத் தோன்றி வைணவத்தை போற்றி வளர்த்தவர்களில் தலை சிறந்தவர்கள் நம்மாழ்வார் முதல் ஸ்ரீசுவாமிதேசிகன் ஈறாக எட்டு ஆர்ச்சாரியார்கள் ஆவர். இதில் நம்மாழ்வார் ஆழ்வாராகவும். ஆச்சார்யராகவும் இருநிலைகளில் இருந்து அருள் புரிந்தவர் ஆவார்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

``பொலிக, பொலிக, பொலிக போயிற்று
பல்லுயிர் சாபம்
வலியும் நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு
யாதொன்றும் இல்லை
கலியும் கெடும் கண்டு கொண்மின் கடல்
வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி ஆடியுழிதரக்
கண்டோம்
(திருவாய்மொழி 5.2.1)

கலியானது நல்லான் ஒருவனால் நலிய போவதை ஆழ்வார் உணர்த்தியதன் மூலம் உணர்ந்த ஸ்ரீமத் நாதமுனிகள் ஆழ்வாரை அதற்கான விளக்கம் கேட்டாராம்.

நம்மாழ்வார், ஸ்ரீராமானுஜர் அவதரிக்க இருப்பதையும், புலைச் சமயங்கள் அழிய இருப்பதையும் கூறி, ஸ்ரீராமானுஜரின் விக்ரகத்தை அமைத்து ஸ்ரீமத் நாதமுனிகளிடம் கொடுத்தார். நாதமுனிகள் அவ்விக்கிரகத்தை உய்யக் கொண்டாரிடம் கொடுத்தார். உய்யக் கொண்டாரிடமிருந்து மணக்கால் நம்பியிடம் வந்து, மணக்கால் நம்பியிடமிருந்து ஆளவந்தாரின் திருக்கரங்களில் ஸ்ரீராமனுஜரின் விக்கிரகம் வந்து சேர்ந்தது. கலி பிறந்த முதல் ஆண்டு நம்மாழ்வார் அவதாரம் ஏற்பட்டது

என்பர். கலி பிறந்து 5108 ஆண்டுகள் ஆகும். ஸ்ரீராமானுஜர் ஆண்டு கி.பி.1017. எனவே ஏறத்தாழ 5100 ஆண்டுகளுக்கு முன்பே அதாவது ஸ்ரீராமானுஜர் பிறப்பதற்குச் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பே ஸ்ரீராமானுஜரின் அவதாரத்தை நம்மாழ்வார் நிச்சயத்து விட்டார் என்பது தெளிவாகிறது.

ஆளவந்தார், தம் சீடர்களிடம் நம்மாழ்வாரால் கூறப்பட்ட பவிஷ்யதா சார்யரான ஸ்ரீராமானுஜர் என்னும் உத்தம வைஷ்ணவன் எங்கு பிறந்து எங்கு வளர்ந்து வருகிறான் என்று கண்டறிந்து வாருங்கள் என்று கட்டளையிடவும், ஆளவந்தாரின் சீடர்கள் பவிஷ்யதாசார்யரைத் தேடி நாற்புரமும் சென்றனர்.

பவிஷ்ய தாசார்யன் என்பவர் வருங்காலத்தில் அவதரிக்கப்போகும் ஆசார்யான் ஆவார்.

இளம் வயதினன், பேரறிவாளன், எல்லா மஹா புருஷ லட்சணங்களும் அமையப் பெற்றவன். விஷ்ணு பக்தியுடையவன், எல்லா நல்ல குணங்களும் கூடியிருப்பவன், எல்லா சாஸ்திரங்களின் உண்மைப் பொருளையும் உணர்ந்தவன், எப்பொழுதும் இனிமையாகப் பேசுகின்றவன். நல்ல ஒழுக்கமுடையவன், நல்லோர்களால் பூஜிக்கப் பெற்றவன். இவைதாம் அம்மகானின் அம்சங்கள் என்றும் ஆளவந்தார் தம் சீடர்களுக்குத் தெரிவித்து இருந்தார். பல இடங்களில் தேடியும் அம்மகானைக் கண்டு பிடிக்க முடியாத சீடர்கள் கடைசியில் ஸ்ரீ காஞ்சியை வந்தடைந்தனர். அங்கு ஸ்ரீராமானுஜரைக் கண்டனர். அவருடைய பெருமைகளைக் கேட்டறிந்து ஸ்ரீராமானுஜர் தான் தன்னுடைய ஆச்சாரியனால் குறிப்பிட்ட பவிஷ்யதாசார்யர் என உறுதியாக நம்பி காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீரங்கம் வந்து, ஆளவந்தாரிடம், ஸ்ரீராமானுஜரைப் பற்றிக் கூறினார்கள்.

ஆளவந்தாரும் ஸ்ரீராமானுஜரே நம்மாழ்வாரால் குறிப்பிடப்பட்ட பவிஷ்யதாசார்யன் என நிச்சயித்து, அவரைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் தன் சீடர்களுடன் ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீகாஞ்சிபுரம் நோக்கிப் பயணம் செய்தார்.

(தொடரும்)



*திருக்கோயில் சொத்துக்களைப் பாது காத்திடவும், திருட்டுகளைத் தடுத்திடவும், அறநிலையத்துறை பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத் திட திருநெல்வேலி மண்டல இணை ஆணையர் திரு. பா. பாஸ்கரன் தலைமை யில் 29. 12.2007 அன்று திருநெல்வேலி மண்டல அறநிலையத் துறைப் பணியாளர் களின் சைக்கிள் பேரணியும் 2.2.2008 அன்று நடைபயணப் பேரணியும் நடைபெற்றன.*



# ஸ்ரீ பஞ்சாட்சரம்

பஞ்சாட்சரம் என்பது ஐந்தெழுத்தாலாகிய திருமந்திரம். மந்திரம் என்றால்

மந் - நினைப்பவனை
திரம் - இரட்சித்தல், காத்தல்,
அதாவது நினைப்பவனை
இரட்சிப்பது என்பது பொருள்

யாரொருவர் யாதொரு மந்திரத்தை முறையாக நினைப்பாராயின், அம்மந்திரம் அவரைத் துன்பத்தினின்றும் காப்பாற்றி நன்மையடையுமாறு அனுக்கிரகம் செய்யும்.

''மகாரம் மநஞ்சைவத் ரகாரம் த்ராண
முச்யதெ
மந்த்ராணமித்யா ஹூர்மந்ர மித்யபிதியதே''
என்பது பிரமாணம்

மேல்காட்டிய பஞ்சாட்சரம் என்பது 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்துக்களாம். இதனை உச்சரிக்குங்கால் சிவாய என்றமையும், இதற்கு, சூக்கும பஞ்சாக்கரம் என்றும் பெயர். இதன் பொருள்.



சி= சிவம், வ= அருள், ய= ஆன்மா, ந = திரோதனம், ம= மலம்.

சிவனருளாவி திரோதமல் மைந்த மவனெழுத் தஞ்சி னடைவாம்! என்பதறிக அவற்றில் முன் இரண்டெழுத்துக்கள் பாசமும், நடு எழுத்தொன்று பசுவுமாகும் எஞ்சியது பதியாகும் பதிக்கும் பாசத்துக்கும் இடைப் பட்டதாய் பாசத்தோடு சேர்ந்து பாசமாயும், பதியோடு சேர்ந்து பதியாயும், பாசமும் பதியும் அல்லாமல் தயங்கும் தன்மையுடையது பசு என்னும் உண்மை இதனால் விளங்கும். பதியோடு கூடிய சம்பந்தத்தை ஞானநடனம் எனவும், பாசத்தோடு கூடிய சம்பந்தத்தை ஊன நடனமெனவும் பெரியோர் கூறுவர். ஊன நடனமொழிந்து ஞான நடந்தானே ஆதரிக்கற்

[கு. சுகுமாரன், மன்னார்குடி]

பாலதென வேதாகமங்கள் முழங்கும். ஆதலால் **ந**காரா **ம**காரங்களாகிய மலங்களைப் பின் தள்ளி **ய**காரமாகிய ஆன்மா **வ**காரமாகிய அருள் கூட்டச் **சி**காரமாகிய சிவத்தில் அதீதப்படும்.

இதற்குப் பிரமாணம் :- விருத்தாசல புராணம்

''மகர வக்கரம் வல்லினந் துறந்திடை
யினத்தில்
இகல றுத்தின மாக்கியே நகரம தீறாய்
வகர வக்கரத் தடங்கிட வொடுக்கி மற்றவை
போற்
றுகளி லாவினஞ் சேர்ந்துறந் துறவர்பா
னின்றான்''

<u>ம</u>கார அட்சரமாகிய திரோதாயி யை வல்லினமாகிய <u>சி</u>கார வட்சரத்தை விடுத்து இடையினமாகிய <u>ய</u>கார <u>வ</u> ஹரம் என்றும் ஆன்மாவிற் பிரிவற வொடுக்கி ந கார அட்சரமாகிய மலத்தை <u>வ</u> கார அட்சரமாகிய அருளிலொடுக்கி, அவைகளை ஒடுக்கினது போல, குற்றமற்ற இனங்களென்னும் <u>ய</u>கார அட்சரமாகிய ஆன்மாவை வகார அட்சரமாகிய அருளிலொடுக்கி, அவ்வருளும் <u>சி</u> கார <u>வ</u> ட்சரமாகிய சிவமும் பேதமற்று அபேதமான அத்துவிதானந்த நிலையில் விளங்குகின்ற மூர்த்திகளான பெரியோர்களிடத்தில் அனுசரித்திருந்தான் சுவேதராசன்.

இதனை விளக்கமாகப் பார்ப்போம்
நம - சீவான்மா, சிவ - பரமான்மா
ஆய - ஐக்கியம்

(சிவ) பரமான்மாவாகிய பதிக்கும்(நம) ஜீவான்மாவாகிய பசுவுக்கும்(ஆய அருட்பராசக்தி வாயிலாக ஐக்யமுண்டாகும் என்பது.

''நம; பதம்தத்கலு ஜீவவாசி
சிவ: பதம்தத் பரமாத்மா வாசீ
ஆயே திதாநாத்ம்ய மிதம் ப்ரசித்தம்
நமச் சிவாயேதி ஜகாத மந்த்ர''

என்னும் வசனத்தினால் பிரகாசிக்கின்றது. இந்த பஞ்சாட்சரம் பிரணவத்தின் பொருளாயிருப்பதாலும் அதைப் போன்ற பிரநக்மந்திரமாதலாலும்: பரம பாவநகரமான மோக்ஷ மந்திரமாகும். ஐந்தெழுத்தில் கூடிய இம்மகாமந்திரத்தில் முதலில் பிரணவமில்லை.

''வித்யாஸுச்ருதி ருத்க்ருஷ்டா ருத்ரைகாதசி
நீச்ருதௌ
தத்ரபஞ்சாக்ஷரீ தஸ்யாம் சிவ இத்யக்ஷர
த்யவம்''

என்பதனால் வித்தைகளெல்லாவற்றுள்ளும் சுருதியே உத்கிருஷ்டமானதென்றும்: அதனுள்ளும் உருத்திரை காதசினியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும்(சிவ) என்னும் த்வயாட்சரங்களே உத்கிருஷ்டமானவை யென்றும் தெரிய வருகின்றது. பிரணவம் வேறு துணை வேண்டாது உச்சரிக்கப்படுவதே போல். ஸ்ரீ பஞ்சாட்சரமும் வேறொன்றின் ஆஸ்ரயமில்லாமல் சபிக்கப்படுவதால் இரண்டும் தம்மில் வேறுபடாத ஒரே மந்திரமாகும்.

இதன் மகிமையோ வெனின்

''ஐந்து பூதமைம் பொறிகளோ டைம்புல
னமாந்த
வைந்தெ னுங்கரு மேந்திய மைவர்காரணரா
மைந்தெ னுந்தொழிலைம் பெரும்
பிரமங்களைத்து
மைந்தெ முத்தினி லுணர்த்துவ ரறிவறிந்
தவரே''

''அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனிபடைத்தனன்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே யமர்ந்திருந்தானே''

அதாவது பஞ்சாட்சரமாவது <u>ந</u>கார <u>ம</u>கார <u>சி</u>கார <u>வ</u>கார <u>ய</u> காரங்காகிய ஐந்தெழுத்துக் களும் முறையே. பஞ்ச பூதங்களையும், பஞ்ச ஞானேந்திரியங்களையும், பஞ்சகன்மேந்திரியங் களையும், பஞ்ச தன்மாத்திரைகளையும், பஞ்ச கலைகளையும், பஞ்ச சாதாக்கியங்களையும், பஞ்ச சக்திகளையும், பஞ்சப் பிரமங்களையும், பஞ்ச கர்த்தாக்களையும் பஞ்ச கிருத்தியங் களையும், பஞ்ச வர்ணங்களையும், தமதுள் அந்தர்பீபவமாய்க் குறிப்பித்து விளக்கிக் கொண்டு சத்தார்த்தப் பிரபஞ்சங்களுக் கெல்லாம் ஆதாரமாய் இருக்கிறது.

மேலும் 'சிவ' என்னும் ஆணெழுத்தும் நம என்னும் பெண்ணெழுத்தும் <u>ம</u> என்னும் அலி எழுத்துஞ் சேர்ந்து பதிபசு பாசத்திலடங்கும்.

இது உச்சரிக்கப்படுகிற முறைமையினாலே ஸ்தூல பஞ்சாட்சரம், சூட்சுமபஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகாகாரண பஞ்சாட்சரம், ஆதி சூக்கும பஞ்சாட்சரம் அல்லது மநாமநு என்று ஐவகைப்படும். போகத்தைக் கொடுக்கக் கூடிய ஸ்தூல பஞ்சாட்சரம், ''நமசிவாய'' என்றும் மோஷத்தைக் கொடுக்கக் கூடிய சூட்சும பஞ்சாட்சரம் ''சிவாயநம'' என்றும் சொல்லப்படும்.

சூக்கும பஞ்சாட்சரத்திலுள்ள சிகாரம் சிவம் வகாரம் அருள். யகாரம் ஆன்மா நகாரம் திரோாண மகாரம் மலம் ஆதலின் இந்த முறைமையை் உணர்ந்து ஊன நடனமாகிய நகார மகாரத்திலே சென்று ஜனன மரணப்பட்டுப் போகாமல், ஞான நடனமாகிய சிகார வகாரத்தைப் பொருந்திச் சிகார முதலாக உச்சரித்து, அப்படி உச்சரிக்கிற முறைமையையும் விட்டு வகாரமாகிய ஞானம் தானாய் நிற்கவே சிகாரமாகிய நேயத்திலே அழுத்துவிக்கும். அது எப்படியெனில் சத்தியமாகிய வகாரம் இடமாகச் சிவமாகிய சிகாரத்தின் இடையிலமுந்தவே அத்தன்மை உண்டாக்கும். இந்த அனுபவரகசியத்தையும், பஞ்சாட்சரம் ஏகாட்சரமாமாறு வகாரத்தில் நகாரமும் யகாரத்தில் மகாரமும். சிகாரத்தில் வகாரமும். அதில் யகாரமும் ஒடுங்கும் முறைமையினையும். காரண பஞ்சாஷரம், மகாகாரண பஞ்சாஷரம். மகாமநு இந்த மூன்றையும் குருபரன் திருத்தாளைச் சேர்த்து வழிபட்டு தெரிந்துகொள்ளலாம். இதுவே பிரம்மாநுபவம் என்னும் சுவாநுபவமாம். முடிவாக ஸ்ரீ பஞ்சாட்சரத்தால் ஒருவன் உணர்ந்து கொள்ள வேண்டிய யாதெனின் துக்க நிவர்த்தியும் சுகப்பேறுமேயாம்.

பாசங்கழன்றால் பசுவுக்கிடம் பதியாம் என்னும் அநுபவவாளர் உரையே சான்றாம். ஆதலாலே

''மெய்த்த வொன்சிவ தத்துவ மதனினுமேலாந்
தத்து வாந்தர மின்மை போன் மறைகளின்
றலையாய்
வைத்த வைந்தெழுந்த தாகிய மந்திர மதனி
லுத்த ரம்பெறு மந்திர மிலையென
உணர்வாய்''

இதனால் மூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்திற்கு மேற்பட்ட மந்திரங்கள் இல்லையென விளங்குகின்றது.

''ஐந்தெழுத்தே யனைத்து வேதங்களு
மைம்ப தெழுத்தே யனைத்தாக

மங்களுமைம்ப தெழுத்தி னடைவை யறிந்த
பினைம்ப தெழுத்தே யஞ்செழுத்தாமே''

''நமச்சிவாயவே ஞானமுங் கல்வியு
நமச்சிவாயவே நானறி விச்சையு
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே''

பஞ்சாட்சரத்தின் உண்மையை உணர்ந்து உய்வு பெறுவோம்.



# சும்மா இருக்கும் சுகம்

# இரைதேடுவதோடு இறையும் தேடு

தலைப்பைப் பார்த்தவுடன் புதுமையான கட்டுரையாக இருக்குமா இல்லை நமது சோம்பலை வளர்க்கக் கூடிய கட்டுரையாக இருக்குமா என்று வாசகர்கள் நினைப்பது எனக்கு புரிகிறது.

ஒருவர் எழுத்தாளராக இருக்கலாம் விவசாயியாக இருக்கலாம் தொழிலாளியாக இருக்கலாம் கணக்கராக இருக்கலாம் அதிகாரியாக இருக்கலாம், பொறியாளராக இருக்காலம், ஆசிரியராக இருக்கலாம், பேச்சாளராக இருக்கலாம், இல்லை பல்துறை வித்தகராக இருக்கலாம், ஆனால் சும்மா இருப்பவராக இருக்கமுடியுமா?. பேசாமல் இருக்கலாம், எழுதாமல் இருக்கலாம்; படிக்காமல் இருக்கலாம் வம்புதும்புகள் ஒப்பாமல் இருக்கலாம் நற்காரியங்கள் செய்பவர்களுக்கு இடையூறாக இல்லாமல் இருக்கலாம் ஆனால் சும்மா இருக்கமுடியாது.

சும்மா இருத்தல் என்றால் என்ன?

எந்த வேலையுமே செய்யாமல் யாருடனுமே பேசாமல் இருப்பதா? இல்லை. பின்பு எதுதான் சும்மா இருப்பது சும்மா இருக்கின்ற நிலை எந்த நிலை அதற்கு முன்னர் உங்களுக்கு ஒரு கதை சொல்ல விழைகிறேன் ஆம்!

சும்மா இருக்கும் சாமியாருக்குச் சோத்துப்பட்டை இரண்டு என்ற கதையை கேட்டிருக்கிறீர்களா தமிழகத்திலே சின்னச்சிறு ஊரிலே அருமையான ஒரு கோயில் அங்கு நித்தியபூஜைகளும் வழிபாடுகளும் சிறப்புற நடைபெற்று வந்தன. முனியாண்டி என்ற பணியாளரும் முத்தைய்யா என்ற சாமியாரும், அந்தக் கோயிலில் இருந்து வந்தனர்.

முனியாண்டி காலையில் எழுந்து விடுவான் ஆலயத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்திடுவான்; கிணற்றிலிருந்து நீர் இறைப்பான்; அருகிலுள்ள நந்த வனத்திலிருந்து பூக்களை பறித்து மாலைகளாகத் தொடுப்பான் பின்னர் இறைவனுக்கு அணிவிக்கப்பட்ட ஆடைகளை துவைத்து உலர்த்துவான் மறுபடியும் மாலை கோவிலை பெருக்கி சுத்தம் செய்வான். வாழைப்பழத் தோல்கள், கற்பூரம் ஏற்றுவதற்காக உபயோகப் படுத்தப்பட்ட தீக்குச்சிகள் மற்றும் பல வேண்டாத பொருட்களை அப்புறப்படுத்துவான் காலையில் நாலரைமணிக்கு எழுந்ததிலிருந்து இரவு வரையில் பம்பரமாகச் சுழன்று வேலை செய்வான்.

முத்தையா சாமியார் காலை நாலரைமணிக்கு எழுந்து நீராடிவிட்டு நீறு அணிந்து நிமலனை நெஞ்சில் அழுத்தி சும்மா உட்கார்ந்து கிடப்பார். மதிய உணவின் போது முனியாண்டிக்கும் மற்றும் விளக்கெரிக்கும் விருமாண்டிக்கும் மற்ற பணியாளர்களுக்கும் மதிய உணவு ஒரு பட்டை சாப்பாடு(கிண்ணம்) வழங்கப்படும். ஆனால் முத்தைய்யா சாமியாருக்கோ இரண்டுபட்டை வழங்கப்படும் முனியாண்டிக்கு வெகுநாட்களாக ஒரு சிந்தனை இருந்தது. நாள்தோறும் நாய்போல் உழைக்கும் நமக்கு ஒரு பட்டை சாதம் சும்மா இருக்கும் சாமியாருக்கு இரண்டுபட்டை சாதமா என்று எண்ணி ஆவேசப்படுவான்.

ஒருநாள் முத்தைய்யா சாமியாரிடம் சென்று வணங்கி அய்யா எனக்கு ஒரு சந்தேகம் அதை நீங்கள் தீர்க்கவேண்டும் என்றான். சாமியாரும் சொல் முனியாண்டி என்றார்.

சாமி நான் காலையில் எழுந்து இந்த ஆலயம்

முழுவதும் பெருக்கி சுத்தம் செய்கிறேன். நீர் தெளிக்கின்றேன் கிணற்றிலிருந்து நீர் எடுத்து பெரியபாத்திரங்களில் நிரப்புகிறேன், மலர்பறிக் கிறேன் மாலை சூட்டுகிறேன். மாசில்லாமல் ஆலயத்தைத் தூய்மையாக வைத்திருக்கிறேன். ஆனால் எனக்கு ஒரு பட்டை சோறு சும்மா இருக்கிற தங்களுக்கு இரண்டு பட்டை சோறு இது என்ன நியாயம்? என்று கேட்டான்.

புன்னகை புரிந்த முத்தையா சாமியார், அன்பனே நீ காலையிலிருந்து இரவுவரை கடினமாக உழைக்க்லாம் கஷ்டப்படலாம் ஆனால் எனதுவேலை உன்னுடைய வேலையைப் போல் அல்ல. கடினமானது உயர்ந்தது என்றார் என்னசாமி சும்மாதான் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள் இது என்ன பெரிய வேலையா?

இல்லை முனியா! என்னுடைய வேலை கடினமானது இதை உன்னால் உணரமுடியாது என்றார்.

கோபம் கொண்ட முனியன் அய்யா எனது வேலை மிகவும் கடினமானது நீங்களோ வேலையே செய்வதில்லை. ஆனால் என்னுடைய வேலையை விடக் கடினமானது என்று எதைவைத்துக் கூறுகிறீர்கள். அப்படி நீங்கள் நினைத்தால் நாளை உங்களது வேலையை நான் செய்வேன் என்னுடைய வேலையை நீங்கள் செய்ய முடியுமா என்று வினவினான். ஆச்சரியம் அடைந்த சாமியார். முனியா அவ்வாறே செய்யலாம் ஆனால் குறைந்தபட்சம் ஒரு முழுநாளாவது என்வேலையை நீ செய்யவேண்டும் உன் வேலையை நான் செய்யவேண்டும் இடையில் பின்வாங்கக் கூடாது. இதற்கு சம்மதித்தால் நாளை காலை உனது வேலையை நான் செய்வேன் எனது வேலையை நீ செய்யலாம்.

முனியன் சரி, சாமி நிச்சயம் நான் பின்வாங்கமாட்டேன் என்று உறுதி அளித்தான் மறுநாள் காலை முத்தையா சாமிகள் எழுந்து நீராடிவிட்டு கோவிலைப். பெருக்கிச் சுத்தம் செய்யத்தொடங்கினார் முனியனும் எழுந்து நீராடிவிட்டு திருநீறு அணிந்து ஓரிடத்தில் உட்கார்ந்தான். முத்தையா சாமியார் முனியன் வேலைகளை ஒவ்வொன்றாக விருப்புடனும் விவேகத்துடனும் செய்து கொண்டிருந்தார் முனியனால். ஒரு மணிநேரத்திற்கு மேல் உட்காரமுடியவில்லை ஆனால் முத்தையா சாமியாரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டதனால் மனதைத் தேற்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ஆனாலும் இரண்டு மூன்று மணிநேரங்கள் கூட அவனால் உட்கார்ந்திருக்க முடியவில்லை அங்குமிங்கும் திரிந்து அலைந்து கொண்டிருந்த முனியனால் ஒரே இடத்திலிருப்பது என்பது நரக வேதனையாக இருந்தது. அவன் சாமியாரை அழைத்து அவர் பாதங்களில் விழுந்தான். அய்யா என்னை மன்னித்தருளும் உங்களது நிலை தெரியாமல் சாதாரணமாக எண்ணிவிட்டேன் இனி நீங்கள் இரண்டு பட்டை அல்லது மூன்றுபட்டை கூடச் சாப்பிடலாம் அரைநாள் கூட சும்மா இருக்கமுடியாத எனக்கு இனி அரை பட்டைச் சோறே போதுமானது என்று சரணடைந்தான்.

முத்தையா சாமியார் முனியா சும்மா இருப்பது என்பது பெரியவேலை என்று முன்பே உனக்கு சொன்னேன் நீதான் ஒப்புக்கொள்ளாமல் எனது வேலையைச் சுலபமாக செய்ய முடியும் என்று வாதிட்டாய் நான் அப்போது உனக்கு குறைந்த பட்சம் ஒருநாளாவது நீ என் வேலையை செய்ய வேண்டும் என்று சொன்னேன் நீயோ சும்மா இருப்பதுதானே இது ஒரு வேலையா? என்னால் முடியாதா? என்றெல்லாம் சொன்னாய் ஆனால் இப்பொழுது இரண்டு மணிநேரத்திற்கே உன்னால் முடியாது என்று சொல்கிறாய்.


சும்மா இருத்தல் என்பது எந்த வேலையும் செய்யாமல் யாருடனும் பேசாமல் இருப்பது என்பது மட்டுமல்ல எதைப்பற்றியுமே நினைக்காமல் இருக்கவேண்டும். அதைத்தான் நமது நாட்டு ஞானிகள் நமக்கு போதித்தனர் எதையுமே நினைக்காமல் எ்தையுமே செய்யாமல் இருக்கும்போது இறைவனின் நினைப்பு வரும். இறைவனின் நினைவு வந்தால் சூரியனைக் கண்ட பனிபோல நமது உள்ளத்திலுள்ள ஆணவம் போன்ற இருள் தன்மைகள் ஓடிவிடும். இன்பமமான எழில்காட்சியை காணமுடியும். எனவேதான் நான் அந்த ஏற்றமிகு எழிற் காட்சியைக் காண்பதற்கு முயற்சி செய்து வருகிறேன் அந்த முயற்சியில் ஒரு சிறிது ஒளிபெற்றுவிட்டால் அரைப்பட்டை சோறு கூட எனக்கு தேவைப்படாது ஏனென்றால் அரிய பெரிய அரும்பொருள் பரம்பொருள் எது என்று உணரக்கூடிய உன்னத வாய்ப்பை நான் பெற்றுவிடுவேன்.

எனவே எனது அன்பிற்குரிய முனியனே நீ உனது கடமைகளை செய்வதோடு மட்டுமல்லா மல் இறைவனையும் தியானிக்கப் பழகு இந்த கருத்தைத்தான் பாம்பன் சுவாமிகள் **இறைதேடுவதோடு இரையும்தேடு** என்றார்.

எனவே அன்பர்களே சும்மா இருப்பது என்பது சும்மா கிடப்பது அல்ல. இறைவனை நெஞ்சில் இருத்தி வழிபாடு செய்தல், உலகத்தார் கண்களில் சும்மா இருப்பது போல் தோன்றும், இப்போது சும்மா இருக்கும் சுகம் என்ன என்பதை அறிந் தீர்களா?

**- காஸ்யபன்**

# நன்றி மறவேல்



பீஷ்மர் (சரதல்பத்தில்) அம்புப்படுக்கையில் படுத்திருந்த போது, யுதிஷ்டிரர் முதலியவர்கள் கண்ணபிரானுடன் இருந்து, அவரிடம் அநேக தர்மங்களைக் கேட்டார்கள். அப்பகுதி மகாபாரதத்தில் சாந்திபர்வம் எனப்படும். அது மனதுக்குச் சாந்தியைத் தருவது.

பீஷ்மர் ராஜதர்மம், ஆபத் தர்மம், மோஷ தர்மம் முதலியவற்றை இனிமையாக இயம்பினார். அவற்றுள் ஒன்று இது!

நன்றி மறந்தவன் அடையுங் கதியை இது நவில்கின்றது.

"பிதாமகரே! பெருந்தகவினரே! நன்றி மறந்தவன், நண்பரை வஞ்சிப்பவன் என்ன கதியடைவான்? அதனை எனக்குக் கூற வேண்டும்'' என்று யுதிஷ்டிரர் வினாவினார். பீஷ்மர் கூறுகிறார்.

வடக்குத் திக்கில் மத்திய தேசத்தில் கௌதமன் என்ற பிராமணன் இருந்தான். அவன் கரிய உடம்பையுடையவன். வேதம் ஓதாதவன். பேராசையுடையவன், நல்லொழுக்கமில்லாதவன். அவன் திருடர்களின் கூட்டம் நிரம்பிய ஒரு கிராமத்திற்குச் சென்றான். அங்கு ஒரு திருடன் தன்னிடம் உள்ள பொருளைப் பலருக்குந் தானஞ்செய்தான். கௌதமன் என்ற அந்தப் பிராமணன், அவன் வீட்டிற்குச் சென்று யாசித்தான். அத்திருடன் அவனுக்கு ஓராண்டுக்கு வேண்டிய பொன்னும், ஒரு வீடும், இளம் பெண் ஒருத்தியையும் தந்தான்.

பிராமணன் அவளுடன் கூடி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான்.

வேடர்களுக்கு இருப்பிடமான அவ்வூரில் வசிக்கும்பொழுது அடிக்கடி அருகில் உள்ள காட்டிற்குச் சென்று, கொக்கு அன்னம், குருவி முதலிய பட்சிகளைக் கொன்று அவைகளைத் தின்று மகிழ்ந்தான். பாவம் என்றால் அவனுக்குப் பாயாசமாக இருந்தது. கொலைபுலை நிரம்பிய அவன் மனம் இரும்பாகக் கல்லாகக் கெட்டியாக இருந்தது.

ஒரு நாள் அந்தவூருக்கு ஒரு தூய வேதியர் வந்தார். அவர் மரவுரி உடுத்தவர். கருணை நிரம்பியவர். வேதாத்யயனஞ் செய்தவர். அவர் அந்த வேடச் சேரியில் உண கிடைக்காதவராகிக் கௌதமன் வீட்டிற்குச் சென்றார். கௌதமன் தோளில் இறந்த அன்ன பட்சிகளை வைத்துக் கொண்டு நின்றான். அவன் உடம்பு உதிரத்தால் நனைந்திருந்தது. குரூரமான



**அருள்மொழியாக**
**திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்**

பார்வையும், கொடிய செயலும் கடிய மனமும் படைத்த அவனைக் கண்டு, வந்த அந்தணர் நாணமுற்றார்.

''கௌதமா! நீ என்ன மூடனாக இருக்கின்றனையே? அந்தணர் குலத்தில் பிறந்த நீ, இப்படி சீர்குலைந்து நிற்கின்றனையே! உன் முன்னோர்கள் எல்லாம் சிறந்த வேதவிற்பன்னர்கள் ஆயிற்றே, நல்ல குலத்தில் பிறந்த நீ குலத்தைக் கெடுத்தனையே! நலத்தை விடுத்தனையே, பாவத்தை அடுத்தனையே, நீ நரகத்துக்குப் போக முயல்கின்றாய். ஆ! ஆ! உன்னைப் பார்ப்பதும் பாவம்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

கௌதமன் நாணமுற்றான். பின்னரும் அவன் மனம் பாவத்திலேயே சஞ்சரித்தது. பொருளில் விருப்பமுள்ளவனாகிப் புறப்பட்டான். பலப்பல இடங்களுக்குப் போனான். கடல்யாத்திரை செய்யும் வியாபாரிகளைக் கண்டான். அவர்களுடன் கூடிச் சென்றான். ஒருநாள் வழியில் மதம் பிடித்த யானை வந்து, அவ்வியாபாரிகளில் பலரைக் கொன்றுவிட்டது. பிராமணன் எப்படியே தப்பித்துக் கொண்டான். வடதிசையை நோக்கி ஓடினான். ஒருவித உதவியுமின்றிப் பசிதாகத்தால் களைப்புற்று வாடினான்.

சிறந்த வனத்தை யடைந்தான். அவ்வனத்தில் எல்லா மரங்களும் எல்லா காலங்களிலும் பூத்திருந்தன. இந்திரனுடைய நந்தவனம் போல் அது காட்சியளித்து. அரசு, ஆச்சா, அகில், மா, பனை, பலா, ஆல் முதலிய மரங்களும், சந்தன மரங்களும் நெருங்கியிருந்தன. அழகான அந்த வனத்தில் யட்சர்களும் கின்னரர்களும், இனிய கானம் புரிந்தார்கள். அங்கு நறுமணம் வீசிக்கொண்டிருந்தது. அழகிய பறவைகள் ஒலித்துக்கொண்டிருந்தன. மனிதனுடைய முகம் போன்ற முகத்தையுடைய பாருண்டம் என்ற புகழ் பெற்ற பறவைகள் மேலே பறந்துகொண்டிருந்தன. பொன்னிறமான மணல்கள் நிரம்பியுள்ளதும் அதிசயமானதுமான அவ்வனத்தைக் கண்டுசுவர்க்கத்தை யடைந்தவனைப் போல் அவன் மகிழ்ச்சியடைந்தான். மேடு பள்ளமில்லாத ஒரு பகுதியில் லட்சுமி தேவி வாசம் பண்ணுவதும், வானளாவி நிற்பதும், அமுதம் போன்ற நிழல் தருவதுமான, ஒரு ஆலமரத்தைக் கண்டான். அம்மரம் குடை போல் கவிழ்ந்திருந்தது. சந்தனத்தால் நனைந்தது போன்ற குளிர்ந்த இலைகளும், கண்ணைக் கவரக்கூடிய அழகிய மலர்களும், தேவர்களுடைய வீடுகள் போன்றதுமான பல மரங்கள் அதைச் சூழ்ந்திருந்தன. உத்தமமான அம்மரத்தினடியில் கௌதமன் அமர்ந்தான். அவனுடைய களைப்பு நீங்கியது. அவன் அப்படியே படுத்து உறங்கிவிட்டான்.

கதிரவன் மேற்கடலில் முழுகினான். காசிபருடைய பிள்ளையும், அறிவுள்ளதும், பிரம்மதேவரிடம் தோழமை பூண்டதும், கொக்குகளுக்கு அரசும் ஆகிய ராஜதர்மன் என்ற உத்தமமான பறவை பிரமலோகஞ் சென்று, பிரம்மதேவரிடம் அளவாளாவிப் பேசிவிட்டுத் தன் இருப்பிடமாகிய அந்த ஆலமரத்திற்கு வந்தது. தேவகன்னிகையிடம் பிறந்ததும், நல்ல காந்தியுள்ளதும், அறிவு நிறைந்ததும், புகழ்படைத்ததும் ஆகிய அப்பறவை, சூரியனுடைய ஒளி போன்ற உயர்ந்த அணிகலன்களை அணிந்திருந்தது. அப்பட்சியைக் கண்டு கௌதமன் அதிசயம் அடைந்தான். அதனைக் கொல்ல வேண்டும் என்று கருதினான்.

பட்சி, ''ஓ பிராம்மணரே! உமக்கு நல்ல வரவு என்னுடைய வீட்டையடைந்த உம்மை நான் உபசரிக்கும் கடமை பூண்டிருக்கின்றேன். நீர் எனது அதிதி. உனக்கு வேண்டியவற்றையெல்லாம் நான் தருகிறேன். பசியாலும் தாகத்தாலும் நீர் களைப்புற்றிருக்கின்றீர்'' என்றது. அதனுடைய அழகையும், இனிய குரலையும் கனியமுதம் போன்ற குணத்தையும் பார்த்து, அவன் ஆச்சரியம் அடைந்தான்.

ராஜதர்மன், ''ஐயா! நான் காசிபருடைய புத்திரன், தாட்சாயணி என்ற மகாபதிவிரதை என் தாய். பிறருக்கு உதவி செய்வதே என்னுடைய வேலை. உம்மைப் பார்த்தால் இரக்கம் ஏற்படுகின்றது. நல்ல குணங்களையுடையவராக நீர் காணப்படுகின்றீர். என்று கூறியது. பின்னும் சாலமரத்தின் நறுமலர்களைக் கொண்டுவந்து மெத்தைபோல் பரப்பி அதில் அவனை அமரச்செய்தது. கங்கா நதியில் வசிக்கும் மீன்களைக் கொணர்ந்து அவனுக்கு முன் குவித்தது. நெருப்பை அதிகப்படுத்தியது. 'ஐயா உணவு செய்யும்' என்று அன்புடன் கூறியது.

பிராமணன் மீன்களை நெருப்பில் சுட்டு நிரம்ப உண்டு பசியாறினான். அவனுடைய களைப்பை மாற்றும்பொருட்டு ராஜதர்மன் தனது சிறகுகளை வீசியது; மலர்களை நிரம்பக் கொணர்ந்து பரப்பிப் படுக்கையமைத்து 'ஐயனே! இதில் சுகமாகப் படுத்துக் கொள்ளும்' என்றது. அவன் அதில் ஆனந்தமாகப் படுத்துக் கொண்டான்.

அவன் அருகில் பறவை யமர்ந்து, உறவினரைப்போல் உபசரித்து, தாங்கள் யார்? தங்கள் உறவினர் யார்? எங்கு வந்தீர்! என்று கேட்டது.

''நான் கௌதம கோத்திரத்திற் பிறந்தவன். பிராம்மணன், என்பேர் கௌதமன், மிகுந்த ஏழை. கப்பலில் சென்று பொருள் தேடலாம் என்று நினைத்து வந்தேன்'' என்றான்.

ராஜதர்மன் என்ற அந்தப்பட்சி, 'ஐயா! நீர் வருந்தவேண்டாம். நல்ல நண்பர்களுடையவனுக்குத் துன்பம் வராது; உனக்கு நான் தக்க உதவிகளைச் செய்வேன். நிரம்பிய தனத்தை நீர் அடைவதற்குரிய உபாயத்தை உரைப்பேன். கவலையை விட்டுவிடும். பொருளை அடையத் தக்க வழிநான்கு என்று வியாழ பகவான் கூறியிருக்கிறார்.

அவை கல்வி, பொருள், அறிவு, நண்பன் என்ற இந்த நான்கும் என அறிக, அன்பரே! நான் உமக்கு நிரம்பவும் பொருள் வரும் வழியைக் கூறுகின்றேன். கவலையை விடும்'' என்று இனிய மொழி கூறியது.

அன்றிரவு சுகமே கழிந்தது. மறுநாள் காலை கொக்கரசன், ''பிராம்மணரே! இரவு சுகமே கழிந்ததா? உடம்பு நலமாக இருக்கின்றதா? மனம் சாந்தியாக் உளதா? இனி உமக்குப் பொன் வரும் வழியைச் சொல்லுவேன். இங்கிருந்து மூன்று யோசனை தூரம் சென்றால் மனுவிரஜம் என்ற நகரை அடைவாய். அசுரர்களுக்கு அதிபதியும் மகானுபாவனும் ஆன விரூபாட்சம் என்ற புகழ்பெற்றவன் இருக்கிறான். அவன் என்னுடைய நண்பன்; அவன் பரம உபகாரி: நீர் அவனிடம் செல்லும்; இதோ, இந்த, என் உடம்பிலுள்ள பொன் போன்ற இறகைக் கொண்டு கொடுத்து. என்னுடைய நண்பன் என்று கூறும்; அவன் உமக்கு நிரம்பவும் பொன்னும் மணியும் வழங்குவான்: சந்தேகமில்லை; உமக்கு நன்மையே வரும்; போய் வாரும்'' என்று கூறியது.

''நல்லது'' என்று கூறிக்கௌதமன் அமுதத்துக்கு ஒப்பான பழங்களைத் திருப்தியாக உண்டுவிட்டு, ராஜதர்மாவிடம் விடைபெற்றுப் புறப்பட்டான்.

சந்தன மரங்களும் அகில், ஆச்சா, முதலிய மரங்களும், நிரம்பிய வனத்தின் வழியே சுகமே நடந்தான். பின்னர் மனுவிரஜம் என்ற பட்டினத்தையடைந்தான். சபைக்காவலர்கள் சென்று அவன் வரவை விரூபாட்சனிடம் தெரிவித்தார்கள். அவனை அவன் முறைப்படி மரியாதை செய்து வரவேற்றான். கௌதமன் அந்த நகரின் சிறப்பைக் கண்டு வியந்தான்.

விருபாட்சன் வேதியனை நல்ல பீடத்தின் மீது இருக்கச் செய்தான். பாதத்தை விளக்கி அருந்த நீர் கொடுத்துப் பூசித்தான். ''நீர் என்ன கோத்திரம்? வேதங்களையெல்லாம் நன்கு அத்யயனம் செய்திருக்கின்றீரா? நீர் எங்கிருந்து வருகின்றீர்? உமக்கு நல்வரவு'' என்று கூறினான்.

பிராமணன், ''அன்பா! நான் மத்திய தேசத்தவன். வேடர்கள் வாழும் சேரியில் வாழ்கிறேன். ஒருவேடுவச்சி இரண்டாவது முறையாக என்னை மணந்து கொண்டாள். நான் வேதம் படிக்கவில்லை வறுமையால் வாடி வந்தேன். உமக்கு நண்பனாகிய ராஜதர்மன் என்ற கொக்கு என்னை உன்பால் அனுப்பியது'' என்றான்.

விரூபாட்சன் இதைக்கேட்டு உள்ளத்தில் ஆலோசிக்கின்றான். ''இவன் வேதம் படியாத பதிதன். இவன் எப்படி ராஜதர்மாவுக்கு நண்பனானான். அப்பட்சி உத்தம குணமுடையது. எனக்கு உன் பிறந்தானைப் போன்ற நட்புடையது. அதன் விருப்பத்துக்காவது இவனுக்கு நான் உதவி செய்யவேண்டும். நாளை கார்த்திகை மாதம் பவுர்ணமி. ஆயிரம் வேதியர்கள் நாளை என் அரண்மனையில் போஜனஞ் செய்வார்கள். அவர்களுடன் இவனும் உபசாரம் பெறட்டும்' என்று தனக்குள் சிந்தித்தான்.

மறுநாள் ஆயிரம் பிராமணர்கள் வந்தார்கள். அவர்களுடன் கௌதமனும் சேர்ந்துகொண்டான். எல்லோரும் சந்தனம் பூசிக் கொண்டார்கள். மாலை சூட்டி அவர்களை நன்கு உபசரித்தான் விரூபாட்சன். அவர்களைச் சிறந்த அதிதிகள் என்று கருதித் தங்கப் பாத்திரங்களில் பாலும் தேனும் நெய்யும் நிறைத்துத் தானம் பண்ணினான். அவன் இவ்வாறு ஆஷாட மாதப் பூரணையிலும், மாகமாதப் பூரணையிலும், பிராம்மண அதிதிகளை வரவழைத்து, மிக்க பயபக்தியுடன் வழிபட்டுத் தான தருமங்களைச் செய்வான்.

அத்தனை அந்தணர்களுக்கும் பொன்னும் நவரத்தினங்களும் தட்சணைகளாகத் தந்தான். கம்பளங்கள், பொன்னாடைகள், வைர வைடூரியங்கள் இழைத்த தங்கப்பாத்திரங்களை வழங்கினான்.

''உங்களுக்கு வந்தனம், நீங்கள் சுகமே போய்வாருங்கள்'' என்று விடைகொடுத்தான்.பிராம்மணர்கள் தங்கள் தங்களுக்குத் தந்த தங்கபாத்திரங்களையும் நவமணிகளையும் ஆடை அணிகலன்களையும் சுமந்து கொண்டு, அவனை வாழ்த்திவிட்டு சென்றார்கள்.

கௌதமனும் மிக்க மகிழ்ச்சியுடன் தனக்குத் தந்த தங்கப் பாத்திரங்கள், பொன், ஆடைகள், நவரத்தினங்கள் ஆகியவற்றைச் சுமந்து கொண்டு புறப்பட்டான். விரைவாக ஆலமரத்தையடைந் தான். ராஜதர்மா பசிதாகத்துடன் களைத்து வந்த அவனை அன்புடன் வரவேற்றது. சிறகால் வீசிக் காற்றையுண்டாக்கி அவனுடைய களைப்பை மாற்றியது.

''அன்பரே நீர் சுகமுடன் சென்று விரூபாட்சனைக் கண்டீரா? என் நண்பனாகிய அவன் உம்மைத் தக்கபடி உபசரித்தானா? போதுமான பொன் தந்தானா?'' என்றுவினவியது.

கௌதமன் ''ஆம் நன்கு அன்புடன் பேணி உபசரித்தான். நிரம்ப பொன்னும் மணியும் தந்தான். உன் நண்பன் என்ற வகையினால், நல்ல மாதிரி என்னை வரவேற்று அன்பு செய்தான். ஒரு குறையுமில்லை'' என்றான்.

கொக்கு நல்ல இனிய கனிகளைக் கொணர்ந்து தந்து பசியாறச் செய்தது. மலர்களைப் பரப்பியது. கௌதமன் அதன் மீது படுத்தான். ராஜதர்மா என்ற அந்த கொக்கு மிக்க அன்புடன் அவன் அருகில் படுத்து உறங்கியது.

''நான் நாளைக்காலை இந்தப் பொன்முதலியவைகளைச்சுமந்து கொண்டு நடந்து போகவேண்டும். நெடுந்தூரம் உளது. வழியில் உணவு கிடைப்பது அரிது. ஆதலால் நிரம்பவும் பருத்திருக்கின்ற இந்தக் கொக்கைக் கொன்று எடுத்துக்கொண்டால் வழிக்கு உணவாக உதவும்'' என்ற நன்றிகெட்ட அந்தப்பாதகன் ஆலோசித்தான்.

தன் அருகில் நம்பி உறங்கிக் கொண்டிருந்த அந்த அன்புள்ள பட்சியை, அருகில் எரிந்துகொண்டிருந்த ஒரு கொள்ளிக் கட்டையை எடுத்துக் கொன்றுவிட்டான். அவன் மனதில் சிறிதாவது கருணையில்லை. அப்பறவையைத் தீயினால் சுட்டுப் பக்குவம் பண்ணினான். அதை ஒரு தோளில் வைத்துக்கொண்டு, பொன் குவியலை எடுத்துக் கொண்டு, வேகமாகப் புறப்பட்டான்.

விரூபாட்சன் என்ற அசுர மன்னன் வழக்கம்போல் தனது நண்பனாகிய தாட்சாயணியின் பிள்ளை ராஜதர்மன் வராமல் இருப்பதுபற்றி வருந்தினான். அதற்கு ஏதாவது வந்துவிட்டதோ என்று துக்கப்பட்டான். தன் புதல்வனைப் பார்த்து ''மகனே! எனது நண்பனாகிய ராஜதர்மனைக் காணேன். அது எப்போழுதும் முதல் சந்தியில் பிரமதேவரை வணங்கச்செல்லும் சென்று திரும்பும்போது என்னைப் பார்த்து விட்டுத்தான் போகும். அது வராமையால் என் மனம் வருந்துகின்றது. புத்தி கலங்குகின்றது. ஒருவேளை அதமனான பிராம்மணனால் அதற்கு ஆபத்து வந்திருக்கக்கூடும். நீ சென்று அதன் நலத்தை யறிந்து வா'' என்றான்.

அம்மைந்தன் பல அசுரர்கள் சூழப் புறப்பட்டான். ஆலமரத்தினிடம் வந்தான். ராஜதர்மாவின் இறகுகள் சிதறுண்டு கிடப்பதையும். அதன் உதிரத்தால் பூமி நனைந்திருப்பதையும் கண்டான். அந்தோ! என்று கூவியழுதான். அந்தப் பாவியை விடக்கூடாது என்று எண்ணி, அசுரர்களுடன் வேகமாக ஓடினான். வழியில் கௌதமனைப் பிடித்து ''சண்டாளா:? நன்றி மறந்த நாயே? உனக்கு நற்கதி கிடைக்குமா? நீ பிராம்மணனா? உண்ட வீட்டிற்கு இரண்டகஞ்செய்தவனே! அறிவில்லாத அதமனே'' என்று வைது, அவனைப் பிடித்துக்கொண்டு தந்தையிடம் காட்டினான்.

''ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை,
கடைமுறை தான்சாந் துயர்ந் தரும்''

என்றபடி கொடியவர்களுடைய கூட்டுறவால் என் நண்பன் மடிய நேர்ந்தது. இவனைக் கண்டம் கண்டமாக வெட்டுங்கள் என்றான்.

உடனே அசுரர்கள் கத்தியெடுத்துத் துண்டித்தார்கள். விரூபாட்சன் ''நன்றி கெட்ட இப்பாதகனை நான், தின்ன மாட்டேன். இவன் உடம்பை வேலைக்காரர்களிடம் கொடுங்கள்'' என்றான்.

வேலைக்காரர்களும் பிற அசுரர்களும் நன்றி மறந்த அவனைத் தின்ன மறுத்துவிட்டார்கள். நாய்நரிகள் முதலிய கொடிய விலங்குகளும் மோந்து பார்த்துவிட்டு அருந்தாமல் ஓடிவிட்டன.

உலகில் குருதாரகமனம், கவளு, கொலை, புலை முதலிய பாவங்களைச் செய்தவர்கட்குக் கழுவாயுண்டு. நன்றி மறந்தவருக்கும் நண்பரை ஏமாற்றியவருக்கும் கழுவாய் கிடையாது.

விரூபாட்சன் ராஜதர்மா என்ற கொக்கைச் சந்தனக் கட்டைகளின் மீது தகனஞ்செய்தான். அப்போது இந்திரன் வந்து அமிர்தத்தால் நனைத்தான். கொக்கு உயிர் பெற்று எழுந்தது. எழுந்து இந்திரனைக் கண்டு வணங்கி ''என் அன்புள்ள நண்பன் கௌதமன் எங்கே?'' அவன் இன்றி நான் வாழமாட்டேன் என்று நவின்றது. அதனுடைய இனிய சொல்லுக்காக இந்திரன் கௌதமனைப் பிழைப்பித்தான். கௌதமன் மிக்க நாணத்துடன் தனமூட்டையைச் சுமந்து வேடச்சேரிக்குச் சென்று சிலகாலம் வாழ்ந்து, நரகத்தை யடைந்தான்.

ஆதலால் நண்பர்களுக்குத் தீங்கு செய்யக்கூடாது. நன்றி மறக்கக்கூடாது. நன்றி மறந்தவனும், நட்புக் கெட்டவனும் கொடிய நரகினை யடைவான்.

ஒருவனுக்குத் தனலாபம், மித்திர லாபம் இந்த இரண்டிலும், மித்திரலாபமே சிறந்தது என்று பீஷ்மர் தருமருக்குக் கூறினார்.

*

# அருள்மிகு பண்ணாரிமாரியம்மன் காவல் தெய்வம்





அம்மா தாயே பண்ணாரி!
அன்னை நீயே ஓங்காரி!
சும்மா இருந்தால் பயனில்லையே-
உனைச் சுற்றி வந்தால் வினையிலையே!

அனைத்து சக்திகளுக்கும் அடிப்படையாக இருப்பது பராசக்தியாகும்(இறைவி) அப்பராசக்தியே(இறைவி) பல்வேறு பெயர்களுடன் பல்வேறு திருப்பதிகளில் (புண்ணியஸ்தலம்) குடி கொண்டுள்ளாள்.

அச்சக்தியே(ஆற்றல்) கொங்குநாட்டின் வடமேற்கு எல்லையருகில் மைசூர் செல்லும் சாலையில் சிறப்பாக வீற்றிருக்கும் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் ஆகும் அவள் மிகவும் ஆற்றல் வாய்ந்த காவல் தெய்வமாக விளங்கும்..

பண்ணாரிஈரோடு மாவட்டம் சத்தியமங் கலத்திலிருந்து மேற்கே 14 கிலோமீட்டர் தொலைவில் கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூருக்குச் செல்லும் சாலையில் அடர்ந்த காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. வடக்கு, தெற்கு, மேற்காகிய மூன்று பக்கங்களிலும் இத்திருப் பதி அடர்ந்த காடுகளால் சூழப்பட்டுள்ளது.

<u>அம்மனின் வடிவம்:</u> அடர்ந்த காடுப் பகுதியில் யானைகளும், காட்டுப் பன்றிகளும், மான்களும், நரிகளும் வண்ண மயில்களும், குரங்குகளும், முயல்களும், கரடிகளும் மற்றும் மிகக் கொடிய நச்சுயிரிகளும் எங்கும் பொதுவாக உலவும் இத்திருப்பதியில் தெற்கு நோக்கிய வண்ணமாக எழுந்தருளியுள்ள அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் தானே தோன்றிய(சுயம்பு) (இலிங்கம்) உள்ளாள்.

<u>புதுமை நிகழ்வு:</u>

இன்றைக்கு, ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விடம் அடர்ந்த காட்டுப்பகுதியாக இருந்தது. இவ்விடத்தில் வற்றாத காட்டாறு ஓடிக்கொண்டே இருக்கும். காட்டாறின் பெயரோ தோரணப்பள்ளம்

என்பதாகும். இக்காட்டாறு இத்திருப்பதியின் மேற்குப்புறத் தில் உள்ளது. திம்பம் மலையின் அடிவாரத்தில், தென்குமரி தெய்வத்தின் தோற்றம் இவ்விடத்தில் நிகழப்போகிறது என்பதை உலகினுக்கு அறிவிக்கவோ என்னவோ இக்காட்டாற்றின் துறையில் பசுவும், புலியும் ஓரிடத்தில் நீர் குடிக்கும் நிகழ்சிகள் நிகழ்ந்துள்ளன.

## காராம்பசு பால் சுரக்க! அன்னையவள் அருள் காக்க!

இச்சுற்று வட்டார கிராம மக்கள் தங்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதற்கு இக்காட்டுப் பகுதிக்கு ஓட்டிச் செல்லுவது வழக்கம். மக்கள் மாடுகளுக்குப் பட்டிகள் அமைத்து காட்டுப் பகுதியிலேயே தங்கிக் கொள்வார்கள். நாள்தோறும் காலையில் மாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்வார்கள். பின்னர் மாலையில் மாடுகளை ஓட்டி வந்து பட்டியில் அடைப்பார்கள். காலையிலும் மாலையிலும் பாலைக்கறந்து மாட்டின் உரிமையாளருக்குக் கொடுப்பார்கள்.



ஒரு பட்டியிலிருந்த காராம் பசு ஒன்று கறக்கச் சென்றால் கறப்பதற்கு நில்லாமல் தன் கன்றுக்கும் கொடுக்காமல் இருப்பதை மாடுகளை மேய்ப்போன் அறிந்தான். மறுநாள் மாட்டினைப் பின்தொடர்ந்து சென்று மறைந்திருந்து கவனித்தான். அப்பசு நாள்தோறும் பாலை ஒரு வேங்கை மரத்தின் அடியில் கணம் புற்கள் நிறைந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன் விருப்பத்திற்குப் பொழிவதைக் கண்டான் இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அவன் மறுநாள் சுற்று வட்டார கிராம மக்கள் மற்றும் ஊர் பெரியவர்களிடம் நிகட்சியைச் சொல்லி அனைவரையும் அழைத்துக் கொண்டு மாட்டினைப் பின் தொடர்ந்து சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் காராம் பசு பால் சொரிவதைக் காண்பித்தான்.

## அருள்மிகு பண்ணாரி மாரியம்மனின் தோற்றம்.

இவ்வரிய நிகழ்ச்சியைக் கண்ணுற்ற மக்கள் மெய்சிலிர்த்து நின்றார்கள். இது தெய்வத்தின் திருவிளையாடல் என்றெண்ணி கைகூப்பித் தொழுதார்கள். அனைவரும் கூடி அவ்விடத்தைச் சுத்தம் செய்தபோது கணம் புற்கள் சூழ்ந்த ஒரு புற்றும் அதனருகில் தானே தோன்றிய இறை அடையாளமும் (சுயம்புலிங்கம்) வேங்கை மரத்தின் அடியில் இருப்பதைக் கண்டார்கள்.

## அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் வாய்ச்சொல் அருளல்

அப்போது அக்கூட்டத்தில் இருந்த ஒருவருக்கு தெய்வ அருள் உண்டாகி தான் (கேரள மாநிலம்) மலையாள நாட்டின் வண்ணார்க்காடு (மண்ணார்க்காடு) என்ற ஊரிலிருந்து பொதி மாடுகளை ஓட்டிக் கொண்டு மைசூர் செல்லும் மக்களுக்கு வழித் துணையாக வந்தேன் என்றும் எழில் மிகுந்த இவ்வியற்கைச் சூழலில் தான் தங்கிவிடுவதாகவும், தன்னை இனிமேல் "பண்ணாரி மாரியம்மன்" எனப் போற்றி வழிபட்டு வாருங்கள் எனவும் அருள்வாக்கில் கூறினார்.

## திருக்கோயில் அமைத்தல்:

அன்னையின் அருள்வாக்கின்படி சுயம்புலிங்கமாக இருந்த அன்னைக்குஅவ்விடத்தில் கணங்குப்புற்கள் கொண்டு ஒரு குடில் அமைத்துக் கிராமிய முறைப்படி நாள்தோறும் வழிபட்டு வந்தனர். பின்பு ஊர் மக்களுக்கும் பெரியதனக் காரர்களும், அன்னையின் சிறப்புக் கருதி அன்னைக்கு விமானத்துடன் கூடிய சிறு கோயில் அமைத்துப் பத்மபீடத்துடன்(தாமரை இருக்கை) திருவுருவம் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

## குண்டம் பெருந்திருவிழா: பூச்சாற்று

ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் உத்திரம் நட்சத்திரம் அதாவது முழுநிலவு நாளுக்கு (பௌர்ணமி) முந்தின பதினைந்தாம் நாள் திங்கட்கிழமை (அமாவாசைக்கு அடுத்த திங்கள் கிழமை இது சில ஆண்டுகளில் முன், பின் வரும்) இரவு சிக்கரம்பாளையம், புதூர், வெள்ளியம்பாளையம் காளிதிம்பம் மலைவாழ் மக்கள், ஊர் பெரியதனக்காரர்களும், அறங்காவலர்களும் திருக்கோயில் அலுவலர்களும் வந்திருந்து அம்மனுக்கு

முழுக்கு (அபிஷேகம்) அழகும் (அலங்காரம்) செய்வித்துப் பூச்சாற்று நடத்தி வைப்பார்கள்.

### நிறைமனையில் அம்பிகை புறப்பாடு.

பூச்சாற்று நடந்த மறுநாள் தேவியை நிறைமனையில் எழுந்தருளிச்செய்து அழகுபடுத்தி சிக்கரசம்பாளையம், புதூர், வெள்ளியம்பாளையம், தொட்டம்பாளையம், வெள்ளியம்பாளையம் புதூர், அக்கரைத் தப்பள்ளி, உத்தண்டியூர், அய்யன்சாலை, தாண்டாம்பாளையம், இக்கரைநெகமம், கெஞ்சனூர், சத்தியமங்கலம், ரங்கசமுத்திரம், கோனுலை காந்திநகர், திம்மையன்புதூர், கோட்டுவீராம்பாளையம், பட்டவர்த்தி அய்யம்பாளையம், புதுவடவள்ளி, புதுக்குய் யனூர், பசவபாளையம், புதுப்பிர்கடவு, பட்டரமங்கலம், இராஜன் நகர் போன்ற ஊர்களில் எழுந்தருளிச் செய்வர்.

ஆங்காங்கு வேண்டுதல்காரர்கள் பூசைகள் செய்வித்தும், காணிக்கைகள் செலுத்தியும் வணங்குவார்கள். அம்மையின் புறப்பாட்டின் போது சோளகர் என்ற மலைவாழ் மக்களின் இசைக்கருவிகளும், அருந்ததியினத்தாரின் தாரை, தம்பட்டை இசைக்கருவிகளும் முழங்கும், கோயிலுக்குத் தொடர்புடையவர்கள் தேவியுடன் வருவார்கள். பூச்சாற்றிலிருந்து எட்டாம்நாள் திங்கட்கிழமை கோயில் வந்து சேருகிறாள் அருள்மிகு பண்ணாரி அன்னை.

### திருக்கம்பம் நடு விழா:

பூச்சாற்றியதிலிருந்து ஒன்பதாம் நாள் செவ்வாய்கிழமை இரவு முன் கூறிய பெரியோர்களால் அம்மனுக்கு வழிபாடு செய்து அன்றிரவு தீத்தூண் (அக்கினிக்கம்பம்) போடுவார்கள்.

அன்றுமுதல் அத்தீத்தூண் அருகே இரவு நேரத்தில் சோளகர்களும் அருந்ததியினத்தாரும் தங்கள் இசைக் கருவிகளை முழக்கி ஆடல் பாடல்களைச் செய் வார்கள். காணவும், கேட்கவும் களிப்பு உண் டாகும். பூச்சாற்றிலிருந்து அம்மனுக்கு நாள் தோறும் முழுக்காட்டு மற்றும் வழிபாடு கள் நடைபெறும்.

### குண்டம் பெருந்திருவிழா:

பூச்சாற்றிலிருந்து பதினைந்தாம் நாள் திங்கட்கிழமை இரவு செவ்வாய்க்கிழமை விடியற்காலை இரண்டு மணியளவில் அம்மனை அழைக்கப்புறப்படுவார்கள். தெப்பக்கிணற்றருகே வழிபாடு செய்து அம்மனை அழைப்பர். சுமார் நான்கு மணியளவில் அம்மனை அழைத்துக் கொண்டு திருக்குண்டத்திற்கு அருகே வருவர். பல்லாயிரக்கணக்கான இறைப்பற்றாளர்கள் குண்டத்தினருகே திரளாகக் குழுமியிருப்பர். சமன் செய்யப்பட்ட குண்டத்தினருகே அனைவரும் கை கூப்பி பணிந்து நிற்பர். வழிபாட்டு முறைப்படி வழிபாடு செய்வோர்(பூசாரியார்) வழிபாடு செய்து முதலில் குண்டத்திலிறங்குவார். தொடர்ந்து ஆண்களும் பெண்களும் இறங்குவார்கள். இந்நிகழ்வு செவ்வாய்க்கிழமை மாலை இரண்டு மணி வரை நடைபெறும். அதன்பின் கால்நடைகளும் குண்டத்தில் இறங்கும். நண்பகலில் சுற்றுப்புற ஊரைச் சேர்ந்த பெண்கள் மாவிளக்கு எடுப்பார்கள்.

### மலர் பல்லக்கு.

புதன்கிழமை இரவு பல்லக்கை மலர்களாலும், மின்விளக்குகளாலும் அழகு செய்து அதில் அம்மனை எழுந்தருளச் செய்து இசை முழக்கத்தோடு திருவீதி உலா நடைபெறும். இரவில் தீத்தூண் பிடுங்குதல் நிகழ்சியும் நடைபெறும். தீத்தூணைக் கிணற்றில் விடுவார்கள்.

### மஞ்சள் நீராட்டுத் திருநாள்

வியாழக்கிழமை மஞ்சள் நீராட்டு விழாவும், அன்னதானமும் நடைபெறும், அன்று அம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

### திருவிளக்கு வழிபாடு

வெள்ளிக்கிழமையில் மாலை நேரத்தில் அம்மனுக்குத் திருவிளக்கு வழிபாடு நடைபெறும். வழிபாட்டில் பெண்கள் கலந்துகொள்வார்கள்.

### மறுபூசைத் திருவிழா.

குண்டம் திருவிழா நடந்த எட்டாம் நாள் திங்கட்கிழமையில் மறுபூசைத் திருவிழா நடைபெறும். அம்மனுக்கு விலை உயர்ந்த

நகைகளை அணிவித்து மலர் மாலைகளால் ஒப்பனை செய்து சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

**திருக்கோயிலைச் சார்ந்த உட்கோயில்கள்**

**திருக்கோயில் பிள்ளையார்** (விநாயகர்)

திருக்கோயிலின் முன் மண்டபத்தில் கிழக்குப் பார்த்த வண்ணமாக பிள்ளையார்(விநாயகர்) அமர்ந்து அருள் செய்கிறார்.

**திருக்கோயில் பொம்மையராயர்.**

அம்மன் கருவறைக்கு அடுத்த அர்த்தமண்டபத்தில் மேற்குப் பார்த்த வண்ணமாக அமர்ந்து அருள் செய்கிறார்.

**திருக்கோயிலைச் சேர்ந்த வெளிக் கோயில்கள்.**

**அருள்மிகு சந்தானப் பிள்ளையார் திருக் கோயில்**

**அருள்மிகு மாதேஸ்வரன் திருக்கோயில்**

**அருள்மிகு சருகு மாரியம்மன் திருக்கோயில்.**

**அருள்மிகு வண்டி முனியப்பன் திருக்கோயில்**

**அருள்மிகு பண்ணாரி மாரியம்மனை வழிபடுவோர் அடையும் நன்மைகள்.**

அன்னையை அன்பர்கள் பொங்கலிட்டும், முடிகளைந்தும், உருள்தண்டம் செய்தும், வேல் நிறைமனை எடுத்தும், நரம்பு, புருடு, கண்ணடக்கம் செலுத்தியும் வழிபடுகிறார்கள்.

அம்மனின் அருளால் தனக்கு ஏற்பட்ட குறை நீங்கிய பின் அன்பர்கள் சூரைப் பொருட்கள் (பருத்தி, மிளகாய், கோழி, புகையிலை, தானியங்கள், தேங்காய்) உப்பு, மிளகு ஆகியவற்றை குண்டத்திலும் தீத்தூணிலும் செலுத்தி வழிபடுவர்.)

கண்களில் உண்டாகும் நோய்கள் தேவியின் புனித நீரால் குணமாகின்றது.



நரம்பு பற்றிய நோய்கள், உடலில் தோன்றும் புருடு(பரு) நோய்கள் முதலியன அம்மனின் வழிபாட்டால் குணமாகின்றன.

**நாள்தோறும் நடைபெறும் வழிபாட்டு நேரங்கள்**

| | |
|---|---|
| காலை வழிபாடு | 5.30 மணி |
| நடுப்பகல் வழிபாடு | 11.30 மணி |
| சாயங்கால வழிபாடு | 5.30 மணி |
| யாம வழிபாடு | 8.30 மணி |

இத்திருக்கோயில் அடர்ந்த காட்டுப் பகுதியில் எழுந்தருளி இருப்பதால் அன்பர்களின் நலம் கருதி திருக்கோயிலின் நடை விடியற்காலை 5.30 மணிக்குத் திறக்கப் பட்டு இரவு 9.30 மணிக்குத் திருக்காப்பிடப் படுகிறது.

தொகுத்து அளித்தவர்
திருக்குறள். அ. தேவராசன்,
தலைமையாசிரியர்(ஓய்வு).
தாசப்பகவுண்டன்புதூர.
சத்தி வட்டம்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } த. பிச்சாண்டி. இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034.
தொலைபேசி எண்: 28334811/12/13

ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை – 86
தொலைபேசி : 23450920/ 28117575

# பாம்பன் சுவாமிகள்

திருப்புகழ், பாம்பனார் பாடல்கள் தெரிந்திட,

வாழ்க்கையில் முன்னேற்றம் காண,


சைவத்தின் மேன்மை உணர்ந்திட



படியுங்கள்

**பாம்பன் சுவாமிகள்**

ஆன்மீக மாத இதழ



**குமரகுரு பதிப்பகம்**

5ஏ. நான்காவது குறுக்கு தெரு
சிஐடி நகர் கிழக்கு, சென்னை - 600 035.
தொலைபேசி: 24338591, 24327544.

# PAMBAN

## TECHNO ASSOCIATES

## Roofings, Shelters & Skylights

5A, 4th Cross Street. C.I.T.Nagar, East, Chennai- 600 0035

phone: 24338591 Telefax : 24327544

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08



# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.

அ.கு.எண்: 638 401. போன்: (04295) 243289

## 2008 ஆம் ஆண்டு குண்டம் பெருந்திருவிழா

| | | |
|---|---|---|
| 10.03.2008 | திங்கட்கிழமை இரவு | திருப்பூச்சாட்டு விழா |
| 18.03.2008 | பங்குனி 5 செவ்வாய் இரவு | திருக்கம்பம்சாட்டு விழா |
| 24.03.2008 | பங்குனி 11 திங்கள் இரவு | குண்டம் |
| 25.03.2008 | பங்குனி 12 செவ்வாய் அதிகாலை 4மணி | பெருந்திருவிழா |
| 26.03.2008 | பங்குனி 13 புதன் இரவு | புஷ்பரதம் |
| 27.03.2008 | பங்குனி 14 வியாழக்கிழமை | மஞ்சள்நீராட்டு விழா |
| 28.03.2008 | பங்குனி 15 வெள்ளிக்கிழமை | திருவிளக்குப் பூஜை. |
| 31.03.2008 | பங்குனி 18 திங்கட்கிழமை | மறுபூசைத் திருவிழா |

அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு அம்பாளின் அருளுக்குப் பாத்திரராகும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

- இவண்
திருக்கோயில் நிர்வாகிகள்

**E-Mail ID**

1. bannari_sty@yahoo.com
2. bannari_sty@sancharnet.in